


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 10, இதழ் - 4, ஜுலை - ஆகஸ்ட் 2024



R4769

## SURROUNDED BY HEAVENLY HOSTS
## பரம சேனைகளால் சூழப்பட்டிருந்தது

2 ராஜாக்கள் 6: 8-23

"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். " சங்கீதம் 91:11

சீரியா, இஸ்ரயேலுக்கு விரோதமாக போர் அறிவித்த போது, படையெடுத்தவர்கள் மலையின் வழியாக வந்து இஸ்ரயேலின் படைக்குள்ளாக நுழைய நினைத்தார்கள். ஆனால் தேவன் தீர்க்கதரிசி எலிசா மூலமாக இஸ்ரயேலர்களை எச்சரித்தார். இப்படியாக அநேகந்தரம் நடந்ததால், சீரியாவின் ராஜா தனது ஊழியக்காரருக்குள் ஒற்றர்கள் இருக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டான். அப்பொழுது சீரியா ராஜாவின் திட்டங்களையெல்லாம் எலிசா தீர்க்கதரிசி முன்னரே இஸ்ரயேல் ராஜாவுக்கு கூறுவதாக அறிவிக்கப்பட்டது.

எலிசா தீர்க்கதரிசி சீரியாவின் எல்லையில் தோத்தானில் இருக்கிறான் என்று அறிந்து சீரியாவின் ராஜா எலிசா தீர்க்கதரிசியை பிடிக்க ஒரு பலத்த படையை அனுப்பினான். அவர்கள் இரவில் அங்கே வந்தார்கள். எலிசாவின் ஊழியக்காரன் அதிகாலமே எழுந்திருந்து அந்த சிறிய பட்டணத்தை படைகள் சூழ்ந்திருக்கக் கண்டான். இதை அவன் தனது எஜமானனிடம் சொல்ல பயத்துடன் ஓடினான். ஆனால் கலக்கம் அடையாத எலிசா: பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைக் காட்டிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்று கூறினார். ஆனால் ஊழியக்காரனுக்கு அது உண்மையாக தோன்றவில்லை. எலிசா ஜெபம் பண்ணி ஊழியக்காரனின் கண்களை திறக்கும் வரை இதை நம்பவில்லை. கண்களைத் திறந்தவுடன் எலிசாவைச் சுற்றிலும் அக்கினி மயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதைக் கண்டான்.

தேவனுடைய ஊழியக்காரர்கள் எங்கே இருந்தாலும் தெய்வீக வல்லமை, ஒரு பலமுள்ள படையைப் போல, அவர்களைச் சுற்றி இருக்கும் என்பது நமக்கான பாடமாக இருக்கிறது. நவீன கண்டுபிடிப்புகள் இயற்கையின் இரகசியங்களை வெளிப்படுத்தி இன்னும் அநேகம் இருக்கின்றன என்று கூறுகின்றன. கம்பியில்லா தந்தி, எக்ஸ்ரே, ரேடியம் முதலானவைகளை அறிந்தவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவன், மனித கண்ணுக்கு தெரியாத ஆயிரக்கணக்காக ஏஜெண்டுகளையும் வல்லமைகளையும் பெற்றிருக்கக்கூடும் என்று நம்புவார்கள். அவைகள் மூலம் தமது சித்தத்தின்படி சகல காரியங்களையும் அவரால் செய்ய முடியும்.

### கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்

தூதர்கள் மனிதனைக் காட்டிலும் சற்று மேலான ஜீவிகளாக மாம்சீக சரீரத்திற்கு பதிலாக ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கிறார்கள். "நீர் மனிதனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்," இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு தூதர்கள் அனுப்படும்படிக்கு பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. தேவனுடைய ஊழியக்காரர்களைச் சுற்றி அவர்களை பாளையமிறங்குகிறார்கள் என்பது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக தெய்வீக ஏஜென்சியும் வல்லமையும் எல்லா இடங்களிலும் தேவையான எதையும் செய்வதற்காக தயார் நிலையில் இருப்பார்கள் என்று பொருள்படுகிறது. யேசபேலுக்கு முன்பாக எலியா ஓடவேண்டும் என்று சித்தங்கொண்ட அதே தேவன் எலிசாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்தார். ஆனால் தேவனுடனான உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிறவர்கள் மட்டுமே இந்த விசேஷித்த கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு கீழ் இருப்பார்கள் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

மனுக்குலத்தை ஆவி மீடியம்கள், ஆவி ரேப்பிஸ்கள் குறிப்புகள், தெளிவுப்படுத்துகிறவர்கள், அட்சர பலகை முதலானவைகள் மூலமாக மாட்ட வைக்க, சிக்க வைக்க "பொல்லாத ஆவிகள்" என்று அழைக்கப்படுகிற விழுந்து போன தூதர்களும் இருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். தேவனுடைய ஜனங்கள் இவைகளுக்கு எதிராக எச்சரிக்கப்படுகிறார்கள். இதன் மூலம் அவர்களும், இந்த விழுந்துபோன தூதர்களுடன் எந்த உறவும் பெரிய ஆபத்தை கொண்டு வரும் என்பதை உலகத்திற்கு அவர்கள் எச்சரிக்கை செய்ய வேண்டும். இந்த விழுந்துபோன தூதர்கள் தங்களை நமது நெருங்கிய நண்பர்களாக தவறாக சித்தரிக்கிறார்கள்.

அநேகர் இந்த கெட்ட ஆவிகள் மூலமாக தவறாக வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பலவிதமான தப்பறையான போதகங்களை நுழைத்திருக்கிறார்கள்; மனித சித்தத்தை சிக்க வைக்க தொடர்ந்து நாடுகிறார்கள். முடிந்தால் தொல்லைகள் மூலம் அவர்களை கட்டுப்படுத்த முயலுகிறார்கள். ஆர்வமே

ஆவியுலகத்திற்கு முக்கியமான தூண்டில் கொக்கியாக இருக்கிறது.

மீடியம்ஸ் உள்ளடக்கிய ஆவியுலக தொடர்பாளர்கள் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இறந்தவர்களுடன் உரையாடுவதாக நினைக்கிறார்கள். உண்மையிலேயே அவர்கள் வேதாகமம் கூறுவது போல "கெட்ட ஆவிகள்" மற்றும் "பொய்யின் ஆவிகள்" என்று அங்கீகரிக்கப்படும். ஆனால் அவைகள் எல்லாமே கெட்ட ஆவிகள் என்று அங்கீகரிப்படுவதில்லை. அவர்கள் சாத்தானின் சக்தியை கொஞ்ச அளவுக்கு புரிந்து கொண்ட அந்த திசையில் வஞ்சிக்கப்படுகிறார்கள். இந்த யுகத்தின் முடிவில் மகா ஆபத்தின் நாட்கள் வரும் என்று வேதாகமம் கூறுகிறது. அதில் குறிப்பிட்ட அளவு இந்த "கெட்ட ஆவிகளால்" கொண்டு வரப்படும். அறிந்தவர்கள் இந்த நிலைமையை புரிந்து கொள்ளாதவர்களுக்கு எச்சரிக்கை கொடுப்பது அவர்களது கடமையாக இருக்கிறது.

### தோத்தானிலிருந்து சமாரியா வரை

சீரியாவின் படைகள் தோத்தானை சுற்றி இருந்த போது, எலிசா தனது ஊழியக்காரனுடன் அவர்களை சந்திக்கும்படி வெளியே வந்து, அவர்களுக்கு கண் மயக்கம் உண்டாகும்படி ஜெபித்தார். அவர்கள் கண்கள் குருடாக்கப்படாமல், கண்மயக்கம் வர செய்யப்பட்டது. ஹிப்னாட்டிசம் சக்தி இருக்கிறது. அது மற்றவர்களின் சித்தத்தில் குறுக்கிடுகிறது. தேவனுடைய பிள்ளைகள் இதை பயன்படுத்துவதில்லை. ஆனால் எலிசாவின் காரியத்தில் தேவன் இதை விசேஷமாக கொண்டு வந்தார். எலிசா படைத்தலைவனை சந்தித்து, நீங்கள் தேடுகிற மனிதனை நான் அறிவேன், நீங்கள் என்னை பின்பற்றி வந்தால் அவர் இருக்கிற வேறொரு பட்டணத்திற்கு அழைத்துச் செல்வேன் என்று கூறி அவர்களை பல மைல்கள் வழிநடத்தி சமாரியாவின் தலைநகரத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கே அவர்கள் இஸ்ரயேல் ராஜா தலைமையாக இருக்கக்கூடிய படைகளால் சூழப்பட்டார்கள். எலிசா மறுபடியும் தேவனை நோக்கி ஜெபித்து அவர்களது கண் மயக்கத்தை நீங்கும்படி செய்தார். இதோ, இப்பொழுது அவர்கள் கைதிகளாக ஆனார்கள். எலிசா அவர்களை முட்டாளாக்கினார். எலிசாவின் யோசனைப்படி இஸ்ரயேலின் ராஜா அவர்களுக்கு விருந்து வைத்து அவர்களை சீரியா தேசத்துக்கு திருப்பி அனுப்பினான். இதன் பலனால் சில காலத்துக்கு சீரியாவின் படைகள் இஸ்ரயேல் தேசத்துக்கு வரவில்லை.

சீரியா ராஜா கொல்லப்பட வேண்டும் என்பது ராஜாவின் யோசனையாக இருந்தது. நீ உனது வில்லினாலும் அம்பினாலும் அவர்களை வெட்டலாம். அவர்கள் தேவனுடைய வழிநடத்துதலால் இங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்களை விருந்தாளிகளாக பாவித்து அவர்களுக்கு விருந்து வைக்கும்படி எலிசா கூறினார். அன்பாக நடத்துதலின் மூலம் எவ்வளவு எதிரிகள் ஜெயங்கொள்ளப்பட முடியும். நீதியான நடத்துதலின் மூலம் யார் கசப்பாக ஆக்கப்படமுடியும்! அன்புதான் உலகை ஜெயங்கொள்ளும் சக்தியாக இருக்கிறது. அன்பு தான் உலகின் பெரிதான ஒன்றாக இருக்கிறது. "தேவனை நேசி, எல்லாரையும் சிறப்பாக நேசி." இது தேவனிடம் நம்மை இழுக்கிறது.

### சிலர் மட்டுமே தேவனுடைய அன்பை அறிந்திருக்கிறார்கள்

தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள் மட்டுமே தேவனுடைய அன்பை அறிந்திருக்கின்றனர். அவர்கள் அதை பூரணமாக அறியவில்லை. சாத்தானின் தந்திரங்களும் அவனது பிசாசுகளின் சேனைகளும் நூற்றாண்டு காலங்களாக அகில உலகத்தையும் குருடாக்கி வைத்திருக்கின்றன. முடிந்த வரை தேவனுடைய ஜனங்கள் அவரது உண்மையான குணலட்சணத்தை மதிக்கின்றனர். தவறான சித்தரிப்பு மூலமும் இடைச்செருகல் மூலமும் தவறான மொழி பெயர்ப்பு மூலமும் அவர்கள் இருளுக்கு பதிலாக வெளிச்சத்தையும் வெளிச்சத்துக்கு பதிலாக இருளையும் வைப்பதில் அவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள். இது எல்லா சபை பிரிவுகளின் விசுவாச அறிக்கையின் மூலம் சிலர் கொஞ்சமாகவும் சிலர் அதிகமாகவும் காண்பித்திருக்கின்றனர்.

தற்காலத்தைக் காட்டிலும் விசுவாச அறிக்கைகளை மிகவும் அதிகமாக நம்பி வந்த நூறு வருடம் அல்லது அதற்கும் மேலான காலத்தில் விளைவு மிகவும் பயங்கரமானதாக இருந்தது. அந்த விசுவாச அறிக்கைகளின் மாய தோற்றத்தினால் நல்ல மனிதர்களும் நல்ல ஸ்திரீகளும் ஒருவரையொருவர் கொடுமைப்படுத்திக் கொண்டு, கட்டை விரலை நசுக்கும் கருவி மூலமும், சித்ரவதை செய்யும் கருவி மூலமும் பழுக்க காய்ச்சிய இரும்பு மற்றும் கழுமரம் முதலானவைகள் மூலம் சித்ரவதை செய்து கொலை செய்து வந்தார்கள். நமது காலத்தைக் காட்டிலும் அவர்களது இருதயம் அவ்வளவு மோசமானதாக இல்லை; ஆனால் அவர்களது தலைவர்கள் மிகவும் மாயையில் இருந்தார்கள். அவர்கள் நித்திய ஆக்கினை முதலான போதனைகளில் மிகவும் நம்பிக்கை வைத்து, தெய்வீக குணலட்சணம் மற்றும் செயல்பாடுகளில் தவறான கருத்து உடையவர்களாயிருந்தனர்.

நாம் எல்லா புத்திக்கும் மேலான தேவனுடைய அன்பை அதிகம் அதிகமாக காண்போமாக, உணருவோமாக, பாராட்டுவோமாக. நாம் அதிகமதிகமாக இந்த தேவனுடைய அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை சரியாக உணர்ந்துகொள்ளுவோமாக. தெய்வீக வார்த்தைகளுக்கும் நாம் அதிக கவனம் செலுத்துவோமாக. நாம் பழங்கால பூர்வீக பிரதிகளை பெற்று படிப்போமாக. நாம் வஞ்சிக்கப்பட்டு விடாதபடி நாம் சிறந்த மொழிபெயர்ப்பை பெறுவோமாக. தேவனுடைய ஞானம், நீதி, வல்லமையின் ஒத்துழைப்புடன் அவரது அன்பை விவேகத்துடன் உணர்ந்து கொள்ள வேண்டும். பரிசுத்தவான்களின் பரலோக இரட்சிப்புக்கான ஆசீர்வாதத்துக்கான சகல ஒத்துழைப்பும் இப்பொழுது இருக்கிறது. அது சீக்கிரத்தில் இந்த ஆபிரகாமின் சந்ததி மூலமாக சகல உலக மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கும். (கலாத்தியர் 3:29)

R4773

# IMMORTALITY OF THE SOUL
# ஆத்துமாவின் சாகாமை

திரு.எடிசன் அவர்கள் மின்சாரத்தை மையமாகக் கொண்ட ஆராய்ச்சியில், மனோதத்துவம் மற்றும் ஆன்மீகத்தை கவனிப்பதற்கு காலம் எடுத்துக்கொண்டிருக்கிறார். சமீபத்தில் ஒரு பத்திரிக்கையில் ஆத்துமாவின் சாகாமையைக் குறித்து ஒரு கட்டுரையில் விவாதித்திருந்தார். அவரது கட்டுரையில் தத்துவ ஞான வல்லமை மற்றும் விவேகமுள்ள விவாதத்தை கொண்டு வந்திருந்தார். மூளையானது ஒரு கொள்கையின் மேல் இன்னொரு கொள்கையையும், ஒரு கோட்பாட்டின்மேல் இன்னொரு கோட்பாட்டையும், ஒரு உண்மையின் மேல் இன்னொரு உண்மையையும் மிகவும் ஜாக்கிரதையாக பார்ப்பதற்கு திறமை பெற்றிருக்கிறது. திரு.எடிசன் அவர்கள் ஆத்துமாவின் சாகாமையை மறுக்கிறார். இயற்கையானது இப்படிப்பட்ட முடிவு எடுப்பதற்கு எந்த உண்மைகளையும் கொடுப்பதாக அவர் காணவில்லை என்று அவர் அறிவிக்கிறார். அவரது விவேகமான விவாதத்திற்காக நாம், தெளிவான ஆதாரம் தேவை என்று அவர் குறிப்பிட்டதை இங்கே குறிப்பிடுகிறோம். மானிட சாகாமையை நாம் யூகிக்கக்கூடாது, ஏனெனில் நாம் மரிக்கும் இனமாக இருக்கிறோம் என்பதே திரு.எடிசன் அவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. எதிர் வகையான நிரூபணங்களை அவர் தேடியிருக்க வேண்டும் என்று நாம் யூகிக்கிறோம். அதாவது மனிதன் அழியக்கூடியவனாக யூகிக்கப்படுகிறான். இதற்கு மாறான கருத்து இருக்குமானால் அதற்கு, சாகாமைக்கு ரூபகாரம் கொடுக்க வேண்டும். திரு.எடிசன் அவர்களின் குறிப்பை கீழே கொடுக்கிறோம்.

“ஒரு மனிதனின் அறிவு நுட்பம் அவனை உருவாக்குகிற எண்ணிறைந்த செல்களால் ஆன ஒட்டுமொத்த நுண்ணறிவாக இருக்கிறது. இது ஆண்களும் பெண்களும் இணைந்த ஒட்டுமொத்த சமூக நுண்ணறிவைப் போல் இருக்கிறது. நீ உன் கையை வெட்டினால் இரத்தம் வருகிறது. அப்பொழுது நீ செல்களை இழக்கிறாய். இது ஒரு நகரத்தில் சில பயங்கரமான விபத்தினால் அதன் குடிமக்களை இழந்ததற்கு ஒப்பாக இருக்கிறது.”

### கடந்தகால தத்துவ ஞானிகள் சித்ரவதை முதலான கருவிகளால் ஊனமுற்றவர்களானார்கள்

கடந்த கால தத்துவ ஞானிகளை ஏற்றுக்கொள்ளாததால் திரு.எடிசன் அவர்களை தத்துவஞானி இல்லை என்று நாம் கூறமுடியாது. அவர் விஞ்ஞானத்தில் அடைந்தது எல்லாம் ஒரு இயற்கையான தத்துவ சிந்தையை அப்பியாசப்படுத்தியதின் பலன்தான் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த காரணத்தினால் ஒரு விஞ்ஞானி என்ற அற்புதமான தரவரிசையை அவர் பெற்றிருக்கிறார். மாறாக கடந்த கால தத்துவ ஞானிகளில் அநேகர் “இருண்ட காலங்களின்” கொடுமைப்படுத்தும் கருவிகளாலும் சித்ரவதை முதலானவைகளாலும் வேதாகம கேள்விகளுக்கு பதிலளிக்க இயலாத ஊனமுற்றவர்களாக இருந்தனர் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அனைத்து மதிநுட்பம் உள்ள ஜனங்களிடமிருந்து குறிப்பிட்ட அறியாமை மற்றும் மூட நம்பிக்கைகளிலிருந்து படிப்படியாக மீண்டு வருகிறார்கள். தேவனுக்கு ஸ்தோத்திரம். அண்டவியல் மற்றும் இரசாயனம் பற்றிய ஏறக்குறைய அனைத்து தத்துவங்களும் தவறானவைகள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. நவீன விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் வானியல் சம்பந்தமான தத்துவங்களில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதாக நம்மை பயமுறுத்தி திகைக்க வைக்கிறார்கள். தத்துவங்கள் மத சம்பந்தமான காரியங்களைத் தவிர எல்லா திசைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இதில் குறிப்பாக படித்தவர்களின் பெரும்பாலானவர்கள் தங்கள் பிதாக்களின் காலத்திய பரிணாமம், “உயர் விமர்சனங்கள்” முதலானவைகளை முற்றிலுமாக கைவிட்டுவிட்டார்கள். கத்தோலிக்க சபையில் மட்டும்தான் ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாக இந்த கொள்கைகளுக்கு படித்தவர்கள் இடையே கொஞ்சம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எனினும் இந்த கோட்பாடுகள் புரட்டஸ்டண்ட் விசுவாச கோட்பாடுகளில் பதிக்கப்பட்டு, அநேக புரட்டஸ்டண்ட் சபையாளரின் உள்ளத்தில் மிகவும் பலமுடன் ஆட்சி செய்கிறது. அவர்கள் தங்களது பிதாக்கள் நம்பினவைகள் எல்லா காரியங்களிலும் தவறாதவைகள் என்று நம்பினார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திரு.எடிசன் அவர்களின் அறிக்கையை பார்த்த நுண்ணறிவாளர்கள் அதை நியாயப்படுத்தினார்கள். அதில் அதிக சக்தியும் தர்க்கமும் இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மனிதன் பலவகையான அங்கங்களை உடையவனாகவும், அவை ஒவ்வொன்றும் மற்றவைகளின் நலன்களிலும் அறிவிலும் தொடர்புடையதாக இருக்கிறது என்று கருதுவதில் திரு.எடிசன் அவர்கள் அப்போஸ்தல அதிகாரத்தை உடையவராக இருக்கிறார். பரிசுத்த பவுல் இந்த வாதத்தை பயன்படுத்தி உண்மையான சபை “கிறிஸ்துவின் சரீரம்” என்று கூறுகிறார். அவர் ஒரு அங்கத்தை கைக்கு ஒப்பிடுகிறார்; இன்னொருவரை காலுக்கு ஒப்பிடுகிறார்; இன்னொருவரை கண் முதலானவைகளுக்கும் ஒப்பிடுகிறார். சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் சரீரம் முழுமை அடையவும் ஒன்றுக்கொன்று இசைந்திருக்கவும் அவசியம் என்று கூறி சபையும் அப்படியே இருக்கிறது என்று கூறுகிறார்.

இங்கே இயேசு எப்படி சபையின் தலைவராக இருக்கிறார் மற்றும் ஒவ்வொரு அங்கமும் மற்ற அங்கத்துடன் இணைந்திருக்கிறது மற்றும் ஒன்றுக்கொன்று அக்கரையுள்ளதாக இருக்கிறது என்கிற அப்போஸ்தலரின் விவாதத்தை நாம் இங்கே பின்பற்றவில்லை. நாம் மானிட உருவத்தின் அதே உதாரணத்தை நாம் எடுத்துக் கொள்ளுவோம். மனித திறமை மனித நுண்ணறிவுடன் சம்பந்தப்பட்டிக்கிறது. ஒருவன் தன் கைகளை இழந்த பிறகு அவன் முன்பு இருந்ததைக் காட்டிலும் அறிவிலும், திறமையிலும் சந்தர்ப்பங்களிலும் குறைந்தவனாக இருக்கிறான். அவன் தன் பாதங்களை இழந்தால் முன்பை காட்டிலும் அதற்கேற்றாற்போல் அவனது அறிவு குறைகிறது. அவன் தன் கண்ணை இழந்தாலோ, கேட்கும் திறமையை இழந்தாலோ, முகர்தலை இழந்தாலோ ஒவ்வொரு இழப்பும் அவனது நுண்ணறிவை குறைக்கிறது. ஒரு கிராமத்தின் முழு ஜனங்களும் பார்வையற்றவர்களாக, கேட்க முடியாதவர்களாக, ருசிக்க முடியாதவர்களாக, தொடு உணர்வு இல்லாதவர்களாக இருந்தால் அது மிகவும் நுண்ணறிவில்லாத சமூகமாகவே இருக்கும். இதுவே வேறு விதமான வார்த்தைகளில் கூறப்பட்ட திரு.எடிசன் அவர்களின் வாதமாக இருக்கிறது என்று நாம் புரிந்துகொள்ளுகிறோம். அவருடைய மொழியை பரந்த அளவில் நாம் எடுத்துக் கொண்டால் திரு.எடிசன் அவர்களது அறிக்கை மிகவும் பொருத்தமான வார்த்தைகளாக காணப்படுகிறது. இதை விளக்குவதற்கு: ஒருவர் சில துளிகள் இரத்தத்தை இழந்தால் அந்த இழப்பு அவரது நுண்ணறிவில் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஆனால் கால் காலன் அளவு இரத்தத்தை இழந்தால் அந்த இழப்பின் மூலம் அவரது நுண்ணறிவு அதிகமாக குறைகிறது; மயக்கம், உணர்ச்சியின்மை எதிர்பார்க்கப்படலாம். இது திரு.எடிசன் அவர்களின் அறிக்கை சரியானது என்று நிரூபிக்கிறது. சில துளிகள் இரத்த இழப்பு ஓரளவுக்கு இழப்பாக இருந்தாலும், நுண்ணறிவு இழப்பாக இருந்தாலும் இழப்பு மிகவும் குறைவாக இருப்பதால் அவரது ஆரோக்கியம் கணிசமான அளவு கெடாது.

### மரணமானது மனிதனை எல்லாவற்றையும் அறியக்கூடியவனாக ஆக்குகிறது என்ற நம்பிக்கை திகைக்க வைக்கிறது

இறந்த மனிதன் உயிரோடிருக்கிறவனைக் காட்டிலும் அதிகமானவற்றை அறிவான் என்ற கூற்று கடந்த காலத்தில் நமக்கு சொல்லப்பட்டது மற்றும் நம்பவைக்க முயற்சிக்கப்பட்டது. தலையில் பலமான ஒரு அடி அவனை உணர்ச்சியற்றவனாக்கும் மற்றும் பலமான அது மனிதனை கொல்லும், கொல்லப்பட்டவுடனே அவனை எல்லாவற்றையும் அறியும்படிச் செய்யும் என்ற உண்மை நம்மை திகைக்க வைத்தது. இதன் தத்துவம் (?) இப்படியாக சொல்லப்பட்டது. ஆத்துமா என்பது அறிவுள்ள ஜீவி, அதைக்குறித்து யாருக்கும் அதிகமாக தெரியாது. அது நமது அழியக்கூடிய சரீரங்களில் அடைக்கப்பட்டு திருப்தியற்ற நிலையில் மட்டுமே கிரியை நடப்பிக்கிறது. மரணம் வந்தவுடனே, ஆத்துமா விடுதலை அடைகிறது. அது மூளையில் பயன்படக் கடமைப்பட்டிருப்பதைக் காட்டிலும் அதிகமாக சிந்திக்கவும் மிகவும் பலமாக விவேகத்துடன் செயல்படவும் முடிகிறது.

நம்மில் அநேகர் குழந்தை பருவத்தில் இப்படிப்பட்ட தத்துவமற்ற தத்துவத்தை நம்பும்படி முயற்சித்தோம். அதற்கான நிரூபணத்தைக் கேட்டோம். அது சபையின் தத்துவ ஞானிகளின் வாக்கு என்றும் அதைக் குறித்து சந்தேகப்பட்டால், நாம் சபிக்கப்பட்டு நித்திய துன்பத்தில் போடப்படுவோம் என்றும் நாம் போதிக்கப்பட்டோம். இதை நம்பி, சபிக்கப்பட்டு நித்திய துன்பத்திற்கு போக விரும்பாமல் நம்மில் அநேகர் நம்மை கட்டுப்படுத்திக்கொண்டோம். நமது மூளையின் பகுதி கிட்டதட்ட நலிந்து போகும்படி அனுமதித்தோம்.

ஒரு ஆத்துமா இவ்வளவு பொருளற்றதாக இருக்கும் என்று நம்ப மதம் கூட கஷ்டப்படுகிறது. பிறகு ஏன் உயிர்த்தெழுதல் என்று கேட்கிறது. இந்த தத்துவம் கூறுவதுபோல, உயிர்த்தெழுதல் என்பது ஆத்துமாவின் இன்னொரு உண்மையான சிறையாகவும், அறிவு குறைவுபடுதலாகவும் இருக்குமா? இதற்கான அறிவை தேடுதலை சிலர் விரக்தியில் விட்டுவிட்டார்கள். சிலர், விசுவாச கோட்பாடு, "ஞானம் என்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற" சகல தத்துவங்கள் அல்லாத அதிகமான அறிவை நாடுகிறார்கள். நம்மில் மற்றவர்கள் தேவனுடைய வார்த்தையை பற்றிக்கொண்டு, அதன் தத்துவத்தை, போதனையை தேடிப்பார்த்து இசைவுபடுத்த நாடுகின்றனர்.

ஒரு காலத்தில் நாம் நம்பினதும் தொழுது கொண்டதுமான அநேக கோட்பாடுகளை நிராகரிக்கிற தேவனுடைய வார்த்தையை சத்தியம் என்றும் அவரை சத்தியபரர் என்றும் அறிக்கை பண்ணுகிற வளருகிற வேதமாணவர் வகுப்பை நாம் சார்ந்திருப்பதில் நாம் சந்தோஷம் அடைகிறோம். (ரோமர் 3:4) நமக்கு சத்தியம் தேவை!

### திரு.எடிசனும் வேதாகமமும்

திரு.எடிசன் அவர்களிடமும் அவரது மத கருத்துகளிலும் நாம் பழக்கம் இல்லாதவர்களாக இருக்கிறோம். ஆனால் அவரது தத்துவ சிந்தை, மனிதன் மற்றும் அவனது எதிர்காலத்தைப் பற்றி வேதாகமம் போதிக்கிற மார்க்கத்தில் இருக்கிறது என்று நாம் நம்புகிறோம். அவர் வேதாகமத்தின் கருத்தை அடைந்துவிட்டார் என்று நாம் கூறவில்லை. ஆனால் அதன் திசையில் அவர் ஒரு நல்ல அடியை எடுத்து வைத்திருக்கிறார். நமது சொந்த விசுவாச கோட்பாட்டில் உள்ள நல்ல அம்சங்களை தள்ளிவிடாதிருந்து, அவைகளில் பெரும்பாலானவை வேதத்திற்கு இசைவில்லாததும் நியாயமற்றதமாக இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒரு மனித ஆத்துமா என்பது அதரிசனமான வஸ்து, தேவனால் முழு தெய்வீக ஞானத்துடன் உண்டாக்கப்பட்டது, மற்றும் இந்த நுண்ணறிவுள்ள ஆத்துமா ஒரு புதிய குழந்தைக்குள் வைக்கப்படுகிறது. அதுவே உண்மையில் குழந்தையாக இருக்கிறது. இது நமக்கு நியாயமானதாவோ, சரியானதாகவோ இல்லை.

இருண்ட காலத்தின் முற்பிதாக்கள், தங்களது ஆச்சரியமான தத்துவங்களின் இப்படிப்பட்ட நிலைமையின் அபத்தங்களை காணாதிருந்தது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அது உண்மையாக இருந்தால் இது விபச்சாரிகள் மற்றும் விபச்சாரக்காரர்களுடன் சேர்ந்து சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகள் முறைகேடான குழந்தைகளை உலகத்திற்கு கொண்டு வந்தவராக்காதா? இன்னும் மோசமாக இந்த கோட்பாடு அன்பு, ஞானம், வல்லமை மற்றும் நீதி உடைய தேவனை, முட்டாள்களையும் மனநலம் குன்றியவர்களையும் உண்டாக்கினவர் என்று குற்றம் சுமத்ததா? மானிட பெற்றோர் வெறும் மனித சரீரங்களை மட்டுமே உண்டாக்குகிறவர்களாகவும் அந்த சரீரங்கள் தேவன் ஒவ்வொரு சமயத்திலும் தனித்தனியாகவும் உண்டாக்குகிற குறிப்பிட்ட ஆத்துமாக்களையும் பெற்றிருக்கிற கொள்கலன்களாகவும் இருந்தால், நாம் உலகில் காண்கிற சீரழிவுக்கு சர்வ வல்லவர் பொறுப்பாகிறார். ஏனெனில் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதைப் போல ஆத்துமாவே எல்லாவற்றிற்கும் பொறுப்பாகிறது.

### பூமியின் முதல் மனிதன்

"இருண்ட யுகங்களின்" தத்துவ ஞானிகளால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த விஷயத்தின் மையத்தவறு, உண்மையான மனிதன் ஒரு ஆவியின் ஜீவி, ஆத்துமா என்று அனுமானித்ததே ஆகும். இதற்கு மாறாக பரிசுத்த பவுல், "முந்தின மனுஷன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன்" என்று உறுதியளிக்கிறார். தீர்க்கதரிசி தாவீது மூலமாக இதே சத்தியத்தை தேவன் அறிவிக்கிறதாவது: "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும்.... அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்." (சங்கீதம் 8:4,5) ஆவிக்குரிய தளத்தில் தேவதூதர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள். மனிதன் தேவ சாயலில் பூரணமானவனாக இருந்தாலும் தேவதூதரைக் காட்டிலும் சிறியவன். அவன் ஆவியின் ஜீவியல்ல. ஒரு மானிடன், ஒரு பூமியின் ஜீவி, " பூமியிலிருந்து உண்டான மண்ணானவன்."

தேவன் மனுஷனுக்கு மண்ணினாலே சரீரத்தை உண்டுபண்ணி, அதிலே ஒரு ஆவிக்குரிய மனிதனை வைக்கவில்லை; ஆனால் தேவன் மனிதனை மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். "மனுஷன் ஜீவாத்துமாவானான்" என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்லுவோமானால், ஆதாம் ஜீவாத்துமாவானான் – ஒரு ஜீவியானான். அந்த மனிதன் பிறகு இருவராக்கப்பட்டு, தனது சாயலில் இன்னும் அநேக ஜீவாத்துமாக்களை பெருக்குகிறவனான். இப்படியாக கடந்த ஆறாயிரம் ஆண்டுகளாக "பலுகிப்பெருகி பூமியை

நிரப்புங்கள்" என்கிற தெய்வீக கட்டளை செயல்முறையிலிருக்கிறது. ஆனால் தேவன் ஆதியிலே ஒரு ஜீவாத்துமாவை உருவாக்கி பிறகு அதை பிரித்து, இயற்கையான செயல்முறையின்படி தலைமுறை தலைமுறையாக மனித ஆத்துமாக்கள் பிறந்து கொண்டிருக்கின்றன. மனிதன் ஒரு பூமிக்குரிய ஆத்துமா அல்லது பூமிக்குரிய ஜீவபிரணியாக, மற்ற சகல பூமிக்குரிய ஜீவிகளை போல இருக்கிறான். மனிதன், ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருக்கக்கூடிய அவனது சிருஷ்டிகரின் பூமிக்குரிய சாயலில் ஒரு உயர்ந்த சுபாவத்தில் இருக்கிறான்.

இந்த நிலைப்பாட்டிலிருந்து எப்படி நாம் கடந்த கால தத்துவங்களின் தவறுகளை தெளிவாக அறிந்து கொள்ளுகிறோம். உண்மையான தத்துவம் வேதாகமத்தில் மட்டுமே நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனினும் திரு.எடிசன் போன்று அறிந்து கொள்ளக்கூடிய, ஊடுருவக் கூடிய தத்துவ சிந்தை உடையவர்கள் இதே சத்தியத்தை இயற்கையின் மாபெரும் புத்தகத்தை ஆராய்வதின் மூலம் அடைய முடியும்.

இந்த நிலைப்பாட்டிலிருந்து முழு மனிதனும் ஒரு ஜீவாத்துமா அதாவது உணர்வுள்ள ஜீவி என்று நாம் பார்க்கிறோம். இன்றைய நாளைப் போல ஆதாமின் சிருஷ்டிப்பு மிகவும் முக்கியத்துவம் உடையதாக இருந்தது. அதே தெய்வீக ஒழுங்குகளின் கீழ் மனிதனின் மூளையின் உருவத்தின்படி அவனது குணலட்சணம் எப்படிப்பட்டது, நல்லவனா அல்லது தீயவனா, குற்றவாளியா அல்லது மனசாட்சி உடையவனா, நற்குணமுள்ளவனா அல்லது கஞ்சனா, மரியாதைக்குரியவனா அல்லது வேறு மாதிரியானவனா என்று தீர்மானிக்கப்படுகிறது. வேதாகமம் கூறுவது போல, "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்." (நீதிமொழிகள் 23:7) ஒரு மனிதனுடைய எண்ணங்கள் அவனது மூளையின் அமைப்பின்படி உருவாகின்றன. இப்படியாக (பிரெனாலஜி) மூளை ஆராய்ச்சி பரவலாக அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானமாக இருக்கிறது. அது மாத்திரமல்ல, பிரெனாலாஜி நமக்கு கூறுகிறதாவது: மானிட சரீரத்தின் பல்வேறு பகுதிகள் மூளையுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றன. மனதின் குணலட்சணம் பொதுவான அம்சங்களிலிருந்து அறிந்து கொள்ளப்படலாம். மூக்கின் வடிவத்திலிருந்து மட்டுமல்ல, உதட்டின் வளைவு, கண்ணின் பார்வை, கையை பிடித்துக்கொள்ளுதல், அதன் பொதுவான வடிவம் கைரேகையின் மூலம் கூட குணலட்சணம் அறிந்து கொள்ளப்படலாம்.

வெளியரங்கமான இந்த அடையாளங்கள் ஜீவாத்துமாவின் குணலட்சணத்தைக் குறிக்கின்றன. அனைத்தும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரே வார்த்தையில் ஒரு ஆத்துமா என்பது ஒரு நபர். மூளையின் பல்வேறு பகுதிகளும் ஒரு தனிநபரின் உணர்வுகளையும் விருப்பங்களையும் குறிப்பிடுகின்றன. அது அநேக அங்கங்களில் ஒவ்வொருவரும் தன் சொந்த குணலட்சணங்களை பெற்றிருப்பதைப் போல இருக்கிறது. இந்த பல்வேறு அங்கங்களின் மானிட மனங்களில் சில பலமுள்ளதாகவும், சில பலவீனமுள்ளதாகவும், பலமுள்ளவைகள் ஆதிக்கம் செலுத்துகிறவைகளாகவும் இருக்கின்றன. இந்த விதியில் விதிவிலக்கும் நிச்சயமாக இருக்கின்றன. இதை நாம் சில சமயம் மாற்றம் என்று கூறுவோம். மாற்றம் என்பது புது ஒழுங்கை அல்லது முறைமையை ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படுத்துவது. அதை நிறைவேற்றும் முறையை கவனிக்கவும்:

(1) குறிப்பிட்ட காரியங்கள் ஒரு நபருடைய அல்லது ஆத்துமாவின் கவனத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. அவை அவர் முன்பு பின்பற்றினதைக் காட்டிலும் ஞானமுள்ளதாக காணப்படுகிறது. ஆலோசனை சங்கத்தின் பல அங்கங்களைப் போல, மூளையில் பல்வேறு பகுதிகள் அந்த விஷயங்களின் நன்மை, தீமை மற்றும் பலன்களையும் தீமைகளையும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரும். இந்த முடிவுதான் விருப்பம் என்று நாம் அழைக்கின்றோம். ஆலோசனை சங்கத்தின் பல்வேறு அங்கங்கள் வாக்குவாதம் செய்து விவாதிக்கிறது போல மூளையில் சில சமயம் துணிச்சலான போராட்டம் இருக்கிறது. ஆட்சியில் இருக்கும் சட்டசபை பலமுள்ளதாகவோ அல்லது பலவீனமாக இருப்பது போல, விருப்பமானது பலமுள்ளதாகவோ அல்லது பலவீனமுள்ளதாகவோ இருக்கும். விருப்பமானது, ஆதரிக்கிற அங்கங்களின் வல்லமை மற்றும் எண்ணிக்கையை பொருத்து ஏறக்குறைய ஊசலாடலாம் அல்லது பலமுள்ளதாக இருக்கலாம். இப்படியாக சிலர் பலமான குணலட்சணங்களை உடையவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம். மற்றவர்கள் பலவீனமாக இருப்பதால் ஊசாலாடி "இருமனமுள்ளவர்களாக" இருக்கிறார்கள்.

## விருப்பம் ஆத்துமாவை, நபரை, அகங்காரத்தை குறிக்கிறது

மனதின் சில பண்புகள் மாம்சத்திற்குரியதாக இருக்கலாம். இந்த வார்த்தை தாழ்ந்த மற்றும் நபரின், ஆத்துமாவின் விலங்கின் குணங்களை குறிப்பதாக இருக்கின்றது. மாறாக இவைகள் மனதின் உயர்ந்த உறுப்புகளாக இருக்கின்றன. அதாவது பயபக்தி, ஆன்மீகம், மனசாட்சி, மாட்சிமை, இலட்சியம் முதலானைவைகள். இவைகள் இருதயம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் பாசங்கள் மற்றும் மனதின் குணங்கள் உள்ளடக்கியிருக்கின்றன. இதைக் குறித்து தேவன் "என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா" என்று கூறி அதைக் கேட்கிறார்.

இப்படியாக நமது உணர்வுகள் மூலமாக நமக்கு வருகிற அனுபவங்கள் பாடங்கள் மற்றும் சுற்றப்புற சூழ்நிலைகளின் தாக்கத்தினால் ஆத்தும குணலட்சணத்தை அனுதினமும் நாம் பெறுகிறோம். குணலட்சணம் உயருகிறது அல்லது தாழ்வடைகிறது. தேவனை நோக்கி செல்கிறது அல்லது பாவத்தை நோக்கி செல்கிறது. ஆனால் முற்றிலுமான சீரழிவு இல்லை, முட்டாள்தனத்தை தவிர. ஏனெனில் அறிவைப் பயன்படுத்துகிற அனைத்து தேவனுடைய பிள்ளைகளிடத்திலும் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது இருந்த ஆதி தேவ சாயலின் சில அம்சங்கள் தேவ கிருபையினால் இருக்கின்றன. சகல சீர்த்திருத்தவாதிகளின் முயற்சி மனதில் கவனத்தை பயம் அல்லது அன்பு அல்லது சுயநலத்தின் மூலமாக இழுத்து, நீதிக்கு இசைவாகவோ அல்லது பாவத்திற்கு எதிராகவோ மனதின் பண்புகளை ஒழுங்குப்படுத்துவதாகும். நிரந்தர மாற்றம் என்பது அன்பின் கவனத்தை இழுத்து பரிசுத்தமான குணலட்சணத்தை உண்டாக்குவதாகும். "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது." பிதாவானவரின் அன்பு அதை பெறுகிற அனைவரின் இருதயத்திலும் ஆற்றல் வாய்ந்ததாக இருக்கிறது. அது நடத்தையிலும், பேச்சிலும் மற்றும் எண்ணத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். வேறு எதினாலும் அதை நிறைவேற்ற முடியாது.

## ஆத்துமாவைக் குறித்து ஒரு மெத்தடிஸ்ட் பிஷப்பின் விளக்கம்

ஒரு மெத்தடிஸ்ட் பிஷப் ஆத்துமாவை குறித்து கூறிய விளக்கமாவது: "அதற்கு உள்ளும் புறம்பும் இல்லை, சரீரம்,

உருவம் அல்லது பாகங்களும் இல்லை. நீங்கள் பத்து இலட்சம் ஆத்துமாக்களை ஒரு கொட்டையின் ஓட்டிற்குள் வைக்க முடியும்." திரு.எடிசன் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு ஆத்துமாவை நம்பவில்லை. இப்படிப்பட்ட ஒரு கருத்தை அவர் நிராகரித்து, தெய்வீக போதனைகளுக்கு ஏற்ப தனது கருத்தை கொண்டிருந்தார்.

அழியாமை என்ற வார்த்தை அரிதாக கல்வி சம்பந்தமாக, மரணமின்மையை குறிக்கும்படியாக பயன்படுத்தப்படுகிறது. அது மரணத்திற்கு எதிரான நிரூபணமாக இருக்கிறது. அது வாழ்வாதாரம் தேவையில்லாமல் தன்னில்தானே ஜீவனோடிருத்தல். அழியாமை என்ற வார்த்தை இந்த அர்த்தத்தில் தேவனுக்கு மட்டுமே உரித்தான குணமாகும். அவரைப் பற்றி வேத வார்த்தைகள் கூறுகிறதாவது: "ஒருவராக சாகாமையுள்ளவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறவர்." இந்த அர்த்தத்தில் அழியாமை பரலோக பிதாவிற்கும் உலக இரட்சகரான அவரது ஒரே பேரான குமாரனுக்கும் மட்டுமே உரியதாக இருக்கிறது. இந்த அழியாமை சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு, உண்மையுள்ளவராயிருக்கக்கூடிய பரிசுத்தமான சிலருக்கு மட்டுமே ஒரு விசேஷித்த பரிசாக (தேவ தூதர்களுக்கோ மற்ற ஜீவிகளுக்கோ இந்த அழியாமை இல்லை.) வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. இவர்கள் மணவாட்டி என்றும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவி என்றும் அழைக்கப்படுகிறவர்கள். இவர்களுக்கு மரித்தோரிலிருந்து முதலாம் அல்லது தலையான உயிர்த்தெழுதலை அருளிச் செய்ய இந்த யுக முடிவில் இரட்சகர் தோன்றும் போது அவர்கள் கனம், மகிமை மற்றும் சாகாமையை பெற்றுக்கொள்ளுவார்கள் என்பதே அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தமாக இருக்கிறது. இந்த அழியாமையை அடைந்த பிறகு, புது சரீரத்தை, இனி மாம்ச சரீரமல்ல, ஆவியின் சரீரத்தை, இனி முதல் மனிதனின் சாயலை அல்ல பரலோக சாயலை பெறுவார்கள். "அவர்கள் மண்ணானவனுடைய சாயலை அணிந்திருந்ததைப் போல வானவருடைய சாயலையும் அணிந்து கொள்ளுவார்கள்." (1கொரிந்தியர் 15:49)

### எல்லா மனிதரும் சாகாமையுடைவர்களா?

மனித ஆத்துமா அல்லது மனிதன் எப்பொழுதும் ஒரு உயிருள்ள ஜீவி அல்லது சரீரத்துடன் குறிப்பிடப்படுகிறது என்கிற வேதாகம போதனையை திரு.எடிசன் முழுமையாக ஏற்றுக்கொள்ளுகிறார். வேதாகமும் திரு.எடிசனும் கூறுவது போல மனிதன் சாகக்கூடியவன் என்பதை நாமும் ஒத்துக்கொள்ள வேண்டும். வேதாகமம் அறிவிக்கிறதாவது: "பாவத்தின் சம்பளம் மரணம்." மேலும் "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்." ஆதாம், தெய்வீக கட்டளையை மீறாதிருந்தால், ஒரு ஜீவாத்துமாவாக தொடர்ந்து ஜீவித்திருக்கலாம். மீறுதல் அவருக்கு மரண தண்டனையை கொண்டு வந்தது. திரு.எடிசன் அவர்கள் வேத வாக்கியங்களோடு இணைந்த எதையுமோ அல்லது ஆதி பாவத்தையோ ஒத்துக்கொள்ளாமலே ஒருவேளை இந்த முடிவை ஏற்றுக்கொள்கிறார்.

பிறகு எங்கே இருக்கிறது மானிட அழியாமை? மானிட சாகாமை இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆனால் அதே பொருளில் தெய்வீக சாகாமை இருக்கிறது. தேவன் சாகாமை உடையவராக இருக்கிறார். அவர் மட்டுமே சாகாமை உடையவராக இருக்கிறார். மனுக்குலத்திற்கான சாகாமையைப பற்றி நாம் பேசும் போது, நாம் அந்த வார்த்தையை கல்வி சார்பாக பயன்படுத்தாமல் சார்பு வழியில் பயன்படுத்தகிறோம். அதாவது மரணமானது ஆதாம் மற்றும் அவரது பிள்ளைகளோடு முடிவடைகிறதில்லை என்று கூறுகிறோம். தேவ கிருபையினால் எதிர்கால வாழ்க்கை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எப்பொழுது, எங்கே, எப்படி என்று வேதாகமம் தெளிவாக கூறுகிறது.

திரு.எடிசன் மற்றும் வேதாகமத்தில் நம்பிக்கையற்ற அநேக சிந்தனையாளர்களும் அதன் போதனைகளின் அழகையும், இசைவுகளையும் காண வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். தகப்பனாகிய ஆதாமினால் இழந்த நித்திய ஜீவன் "அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராகிய" இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் மீட்கப்பட்டிருக்கிறது என்று வேதாகமம் அறிவிக்கிறது. ஆதாமின் சந்ததியினர் அனைவரும் அவரது மரண தண்டனையில் பரம்பரையாக பங்கு பெறுவதால், கல்லறையின் வல்லமை, பாவம் மற்றும் மரணத்திலிருந்து அவரது மீட்பிலும் அவர்கள் அனைவரும் பங்குபெற அனுமதிக்கப்படுவார்கள் என்று மேலும் வேதாகமம் நமக்கு கூறுகிறது. இன்னும் வேதாகமம் கூறுகிறதாவது: மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஏனெனில் ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். (1கொரிந்தியர் 15:21-23)

"நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு" என்று பிரதான அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறார். "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிற அநேகர் விழித்து எழுந்திருப்பார்கள்" என்று தானியேல் அறிவிக்கிறார். தற்காலம் பாவம் மற்றும் இருளின் இரவாக இருப்பதால், எழுந்திருக்கும் நேரம் காலையாக இருக்கும். துக்கம் மற்றும் கண்ணீரின் இரவு போவதால் மகிமையான காலை நெருங்குகிறது. ஆயிரம் வருட மகா நாளின் மகிமையான விடியல் இருக்கும். நமது காலத்தின் ஆச்சரியமான கண்டுபிடிப்புகள் மூலம் அதன் வெளிச்சம் முன்னிருட்டில் ஒளிர்கிறது. அதில் திரு.எடிசன் அவர்களும் சர்வ வல்லவரால் பயன்படுத்தப்பட்டிருக்கிறார். இருளையும் அறியாமையையும், மூடநம்பிக்கை மற்றும் பாவம் ஆகியவற்றை சிதறடித்து நீதியின் சூரியன் விரைவில் உதிக்கும். விரைவில் தெய்வீக நீதி மற்றும் அன்பின் ஆளுகை, மரண சாபத்தில் அல்லது தண்டனையின் கீழ் இருக்கும். நமது இனத்துக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். உயர்த்தப்பட்டு அல்லது உலகலாவிய பரதீசின் மத்தியில், இரட்சகரின் சாயல் மற்றும் ரூபத்தில் பூமிக்குரிய சுபாவத்தில் படிப்படியாக உயிர்த்தெழுப்பப்பட்டு, அனைவரும் பெலவீன மற்றும் சீரழிவின் விழுந்துபோன நிலைமையிலிருந்து மீட்கப்படும் சந்தர்ப்பத்தை விரைவில் பெறுவார்கள்.

### கார்டினால் கிப்பன்ஸ் அவர்களின் வார்த்தை இதற்கு ஒத்திருக்கிறது

கார்டினால் கிப்பன்ஸ், தத்துவஞானி எடிசனுக்கு பதில் கூறும் வண்ணமாக கொலம்பியன் பத்திரிக்கையின் நிருபருக்கு ஒரு பேட்டி அளித்தார். வேத வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விஷயத்தில் அவருடைய வாதத்தின் மையக்கருத்தை கீழே கொடுத்திருக்கிறோம். நம்மைப் போல கார்டினாலும் வேத வாக்கியங்களின் சாட்சியத்தில் ஒரு எதிர்கால வாழ்க்கையை காண்பதில் நாம் சந்தோஷம் அடைகிறோம். அவர் கடந்த இருண்ட கால தத்துவங்களில் பார்க்காமல் பரிசுத்த வேத வாக்கியங்களின் உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தத்தில் காண்கிறார். அதைக் கீழே கொடுத்திருக்கிறோம்:-

"கிறிஸ்து நித்திய ஜீவனின் நிச்சயத்தை மனுக்குலத்திற்கு" கொண்டு வருகிறார். அவர் தனது சொந்த

உயிர்த்தெழுதலினால் அதை நிரூபித்தார். இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து ஒருவர் பலவீனமாக நினைத்தால், அவரை 1 கொரிந்தியர் 15ஆம் அதிகாரத்தை படித்து சிந்திக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். அறிவுள்ள எந்த அறிஞனும் பரிசுத்த பவுலின் சாட்சியத்தை மறுக்க மாட்டான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நமது கர்த்தரை மரணத்திற்கு பிறகு பார்த்தவர்களின் சாட்சியத்தை பரிசுத்த பவுல் மறைக்கவில்லை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். அப்போஸ்தலர்கள் மற்றும் கிறிஸ்துவின் சீஷர்கள் போன்ற அறிவுள்ள மனிதர்கள் தவறு செய்திருந்தால், அவர்கள் தங்களது சொந்த கண்களின் சாட்சியத்தை நம்பமுடியவில்லை என்றால், இப்படிப்பட்ட ஒரு மாயை இப்படிப்பட்ட குணலட்சணங்களை இவ்வளவு வருடங்களாக அவர்களது நம்பிக்கைக்கு ஆதாரமாகவும் அவர்களது வாழ்க்கையை மாற்றும் சாத்தியக்கூறும் இருக்குமானால், மனித சாட்சியத்திற்கு எந்த மதிப்பும் இருக்காது. பிறகு நமது நீதி மன்றத்தை மூடுவோமாக. ஏனெனில் அநேக நம்பகமான சாட்சியங்களினால் எந்த வழக்கும் நிரூபிக்கப்படவில்லை. ஆழமான நம்பிக்கையின் குரலில் கார்டினல் கூறியதாவது: “இல்லை, கிறிஸ்து உயிர்தெழுந்தார்; அவரது உயிர்த்தெழுதல் மனிதனின் சாகாமைக்கு தெளிவான ஆதாரம்!”

**R4776**

## MURDERS HER GRAND CHILDREN
## அவளது பேரப்பிள்ளைகளை கொல்லுகிறாள்

2 ராஜாக்கள் 11:1-20

“அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு , அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்.” சங்கீதம் 119:2

யேசபேலின் குமாரத்தி அத்தாலியாள், தன் கணவன் இறந்த பிறகு இறந்த கணவனின் உரிமை பெற்று யூதேயா ராஜ்யத்தின் ராணியானாள். அவளது மகன் அகசியா ராஜாவானான். கிழக்கத்திய நாடுகளின் ராஜாவின் தாய் ராஜ்யத்தில் மிக அதிக அதிகாரத்தை உடையவளாக இருக்கிறாள். உதாரணத்திற்கு சீனா நாடு. இதுவே யூதர்களிடமும் வழக்கமாக இருந்தது. ராணி அத்தாலியாள் அதிகமான செல்வாக்கை அப்பியாசப்படுத்தினாள். அவள் உண்மையான தேவனுக்கு எதிராகவும் பாகாலை வணங்குகிறவளாகவும் இருந்தாள். இது மாத்திரமல்ல, இஸ்ரயேலின் ராஜாக்கள் வெளிநாட்டு ராஜாக்களின் குமாரத்திகளை திருமணம் செய்ததால் அது பெரிய தீமையை கொண்டு வந்தது. அவளது தாயார் யேசபேல் ஒரு குறிப்பிடத்தகுந்த உதாரணமாய் இருந்தாள். சாலொமோன் தனது புறஜாதி மனைவிகளால் சிக்கிக்கொண்டான் என்பதை நாம் நினைவு கூருகிறோம்.

இந்த திசையில் சகல யூதர்களுக்கான தெய்வீக கட்டளை புறஜாதி பெண்களை திருமணம் செய்யக்கூடாது என்பதை நாம் நினைவு கூருகிறோம். தேவ கட்டளையை மீறுகிற ஒவ்வொன்றும் அவர்களுக்கு கொடுமையான தண்டனைகளை கொண்டு வந்தது. ஒரு தேசம் மட்டுமே அவரது விசேஷித்த ஜனங்களாக இருக்க வேண்டும் என்கிற தெய்வீக ஏற்பாட்டிற்கு இது இசைவாக இருக்கிறது. மற்ற தேசங்கள் அவரது ஜனங்கள் அல்ல. அவரது கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதங்களை கொண்டு வரும். கீழ்ப்படியாதிருந்தால் துன்பங்களை கொண்டு வரும். நியாயப்பிரமாணமானது இன்னும் யூதர்கள் மேல் இருக்கிறது. ஆனால் மற்றவர்கள் மேல் இல்லை.

யூதர்களின் நியாயபிரமாணத்தின் உண்மைப் பொருளை அல்லது ஆவிக்குரிய முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டால், அது அனைவராலும் அனுசரிக்கப்பட வேண்டும். “பரிசுத்த ஜாதியும் அவரது சொந்த ஜனமாயும்” இருக்கக்கூடிய கிறிஸ்தவர்களுக்கும் இந்த நிலைப்பாட்டில் இது பொருந்தும். கிறிஸ்தவர்களும் அவிசுவாசிகளுடன் இணைக்கப்படக் கூடாது. கிறிஸ்தவர்கள் உலகத்தை விட்டு பிரிந்து வந்து தனித்து இருக்க வேண்டும். எனினும் இது பேர் கிறிஸ்துவர்களுக்கு பொருந்தாது. இது கர்த்தருடன் முழு அர்ப்பணம் செய்திருக்கிற ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட வகுப்பாருக்கு மட்டுமே பொருந்தும். இவர்கள் “கர்த்தருக்குள் இருக்கிறவர்களை” “அர்ப்பணம் செய்தவர்களை,” மட்டுமே திருமணம் செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறார்கள். அந்த தெய்வீக கட்டளையை புறக்கணிக்கிறவர்கள் அவர்களது சொந்த ஆவிக்குரிய அபிவிருத்தியையும் அவர்களது சொந்த சந்தோஷத்தையும் அவர்களுடன் இணைக்கப்படுகிற உலக நபரின் சந்தோஷத்தையும் ஆபத்துக்குள்ளாக்குகிறார்கள்.

### அதிகாரத்திற்காக கொலை செய்தல்

அகசியா ராஜா யெகூவினால் கொல்லப்பட்டவுடன் அவனது தாய், அவளது அதிகாரம், கனம் மற்றும் அவள் விரும்பிய செருக்கான இருதயம் சுயநலம் போன்ற செல்வம் ஆகியவற்றை அவள் இழந்ததை உடனே உணர்ந்தாள். அவளது பேரன் அரியணையில் ஏறிய அந்த தருணத்தில் அவள் தனது அதிகாரத்தை விட்டு தனது மருமகளுக்கு ஆதரவாக விலக வேண்டும் என்பதை உணர்ந்தாள். அவளது செருக்கான இருதயம் இது நடக்கக்கூடாது, அதற்காக தான் ஒரு கொலைகாரியாகக் கூட ஆகலாம் என்று தீர்மானித்தது. உடனே அவள் ஒரு கைக்குழந்தையைத் தவிர தனது பேரப்பிள்ளைகள் அனைவரையும் கொன்று போட்டாள். அந்த குழந்தை யோவாசை அவனது தாதியுடன் பள்ளி அறையில் ஒளித்துவைத்தார்கள். பின்னர் அவன் ஏழாவது வயது வரை பழைய ஆலயத்தின் அறைகளில் ஒன்றில் வளர்க்கப்பட்டான். ராணி அத்தாலியாளின் ராஜ்யபாரத்தில் ஆலயம் பயன்பாட்டில் இல்லாதிருந்தது. அவள் பாகாலை சேவித்து வந்தாள்.

இங்கே நமக்கான பாடம் பெருமையின் சக்தியாகும். இப்படிப்பட்ட தூண்டுதல் இருந்தாலும் கொலைகள் செய்கிற அளவுக்கு போகமாட்டார்கள் என்று நாம் நம்பலாம். நம்மில் அநேகர் நாம் பெற்றிருக்கிற அரியணையை தக்கவைத்துக் கொள்ளவோ அல்லது அதை பற்றிக் கொள்ளவோ இப்படிப்பட்ட ஒரு தூண்டுதலை பெறமாட்டோம். பெருமையின் சக்தியினால், அரியணையை அடைவதற்கு கொலைக்கு வழிநடத்தப்பட்டதை சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டதை நாம் பார்க்கிறோம். உதாரணத்திற்கு, ஏரோது ராஜா தனது மற்றும் தனது சந்ததியினரின் இஸ்ரயேலின் அரியணையை தக்க வைத்துக் கொள்ளுவதற்கு பெத்லகேமில் இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைக் கொன்றான். லவோதியாள், கான்ஸ்டான்டின் நோபிளின் சக்ரவத்தினியாவதற்கு தனது ஆறு மகன்களை ஒவ்வொன்றாக கொன்றதை சரித்திரம் நமக்கு கூறுகிறது. இரேனே என்ற பெயரையுடைய இன்னொரு

தாய் (இரேனே என்பதற்கு சமாதானம் எனறு பொருள்) தனது மகன் ராஜ்யத்தை ஆள தகுதியுள்ளவனாக இருக்க மாட்டான் என்று நினைத்து அவனது கண்கனை பிடிங்கி அதன் மூலம் ராஜ்யத்தை ஆளுகை செய்ய நாடினாள்.

மனிதனின் இருதயம் விழுந்துபோன நிலைமையில் எல்லாவற்றிற்கும் மேலாக, வஞ்சகமும் மிகவும் பொல்லாததாகவும் இருக்கிறது என்ற வேதாகமம் கூறுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இஸ்ரயேலின் மூலமாக உலகில் தேவன் ஸ்தாபிக்கும் மேசியாவின் ஆளுகையில் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதம், மனுக்குலத்தின் கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை பெறும்படி கிரியை செய்யும்; தேவ சாயலில் அவன் சிருஷ்டிக்கப்படும் போது சரியான மனித தயவை பெற்றிருப்பார்கள் என்று வேதாகமம் நமக்கு கூறுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை! மேசியாவின் ராஜ்யம் பாவத்தையும் பாவிகளையும் தடுப்பது மாத்திரமல்ல, ஆனால் திரும்ப கொடுக்கும் செயல்முறையில் இருதயத்தின் கல்லான தன்மையை எடுத்துப்போட்டு, விருப்பமுள்ள மனுக்குலத்தை மிருதுவான இருதயத்துக்கும் தேவனை நேசி மற்றும் பிறனை நேசி என்கிற தெய்வீக கட்டளைக்கு இசைவாகவும் கொண்டு வரும் என்பதில் நாம் எவ்வளவு சந்தோஷப்படுகிறோம்.

நாம் ராஜாக்களும் ராணிகளுமாக இல்லாதிருப்பதினால் அவர்களது தூண்டுதலை நாம் பெறாதிருக்கிறோம். கடினமான இருதயத்தின் அதே கோட்பாடு வியாபார உலகிலும், சமூக உலகிலும் மற்றும் குடும்பத்திலும் கிரியை செய்கிறது என்பதை நாம் கவனிப்போமாக. அது வியாபார உலகில் போட்டியாளரை அழிக்க கிரியை செய்யும். சமூக உலகில் அது போட்டியாளர்களை பிரித்து, தவறாக சித்தரித்தல், அவதூறு முதலானவைகளை செய்யும். வீட்டில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும், சகோதரிக்கும் சகோதரர்களுக்கும் பிரிவினையை ஏற்படுத்தி அநீதியை நிலைநாட்டும். இதை எல்லாவற்றையும் சரிபடுத்துவதற்கு நீதியின் அன்பு வேண்டும். அது முடிந்தவரை ஒவ்வொருவரையும் நேசிக்கவும் பொன்னான பிரமாணத்திற்கு கீழ்ப்படியவும் வழிநடத்தும்." உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்பு கூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்கிற தெய்வீக சித்தத்திற்கு இணங்கச் செய்யும்.

### குழந்தை ராஜாவுக்கு முடிசூட்டுதல்

குழந்தை ராஜாவின் பெயர் யோவாஸ். அவன் ஆறு வருடம் ஒளித்து வைக்கப்பட்டு, ஏழாவது வருடத்தில் முடிசூட்டப்பட்டான். பிரதான ஆசாரியன் யொய்தாவின் மகள் தான் யோவாசை காப்பாற்றியவள். இந்த யொய்தாதான் முடிசூட்டும் விழாவை நடத்தியவன்; அவன் ஞானத்துடன், சந்தேகம் வராதபடிக்கு அதிபதிகளையும் அழைப்பித்தான். அதே போல காவலரையும் அழைப்பித்து இளைய ராஜாவுக்கு பாதுகாப்பு கொடுக்கவும் அரண்மனையை விட்டு வெளியே வரவும் கட்டளையிட்டான். நீழா வெற்றிகரமாக நிறைவேறியது. "ராஜா வாழ்க!" என்கிற சத்தத்தைக் கேட்டு,அத்தாலியாள் அரண்மனையிலிருந்து ஆலயத்துக்கு வந்து நிலைமையை புரிந்துகொண்டு, "துரோகம், துரோகம்!" என்று கூவினாள்.

நீதியை நிலைநாட்டுவதற்காக செய்கிற முயற்சியை துரோகம், கிளர்ச்சி, கொடுமை என்று கருதுகிற அளவுக்கு மனித இருதயங்களில் சில சமயம் அநீதியானது ஆழமாக ஊடுருவுகிறது. அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கான பாடம் என்னவென்றால், "எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" என்பதே ஆகும். (நீதிமொழிகள் 4:23)

கிரீடம் ராஜகுமாரன் தலைமீது வைத்தபொழுது, அதன் மேல் சாட்சியின் ஆகமத்தை, பத்து கட்டளையின் புத்தகச் சுருளை வைத்தார்கள். இப்படியாக கிரீடத்தைக் காட்டிலும் தெய்வீக பிரமாணம் மேலானது என்று குறிப்பிடப்பட்டது. நன்கு சீரான இருதயத்தில் காரியங்கள் இவ்விதமாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். முதலாவது தெய்வீக சட்டமாக இருக்க வேண்டும். இரண்டாவது மனித சட்டமாக இருக்க வேண்டும். மானிட சட்டங்கள் வழக்கமாக உயர்ந்த நிலையில் இருக்கின்றன. ஜனங்கள் அவற்றை தகுதியானதாக ஆக்குகிறார்கள்.

ராணி அத்தாலியாள் கொலைகாரியாக இருந்ததின் மூலம் ஆறு வருடம் ராஜ்யபாரத்தை எடுத்துக்கொள்ள அனுமதித்ததற்கு காரணம் யூதேயா தேசபக்தி மற்றும் நடுத்தர வயதின் குணங்களில் ஓரளவுக்கு மூழ்கியிருந்ததே ஆகும். அதே போல நாடும் நகரமும் பொது நலனுக்காக வஞ்சனையான அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. அவர்கள் தகுதியானவர்களாக கருதப்பட்டு நல்ல மதிப்பையும் பெறுகிறார்கள். இருதயம், அறிவு சிந்தையே உயர்ந்த தர நிலைக்கு கற்பிக்கப்பட வேண்டும். இந்த உயர்ந்த தரநிலை சமார்த்தியமான சரீரம் உடையவர்களால் அடையப் பெறுகிறது.

**R4777**

## TOO MUCH MONEY - FURTHER OFFERINGS REFUSED

## அதிகப்படியான பணம் – மேலும் காணிக்கை மறுக்கப்பட்டது

மனப்பூர்வமான காணிக்கை மட்டுமே மத காரியங்களுக்காக கொடுக்கப்படுகிறதைப் பற்றிய

மிகவும் பழங்காலத்திலிருந்து ஒரு பாடம் – கணக்கர் இல்லாத பொக்கிஷக்காரர்

2 ராஜாக்கள் 12:1-16

"இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்தற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்." 1 நாளாகமம் 29:9

முந்தைய பாடத்தில் நாம் பார்த்த நிகழ்வுகள் நடந்து பதினாறு வருடங்கள் ஆனது. அது யோசியா ராஜாவின் இருபத்தி மூன்றாவது வருடமாக இருந்தது. ஆலயத்தை பழுது பார்க்கும்படி அவன் முன்னரே ஆசாரியர்களுக்கு யோசனை கூறியிருந்தான். ஆலயமானது பாழடைந்திருந்தது. ஏனெனில் ஜனங்கள் யேகோவாவை அரை மனதுடனே ஆராதித்துவந்தார்கள். சுற்றிலும் இருந்த விக்கிரக ஆராதனையின் செல்வாக்கு இன்னும் அவர்களிடம் இருந்தது. அவர்களில் சிலர் இன்னும் பாகாலுக்கு தூபங்காட்டி வந்தார்கள்.

### ஆசாரியர்கள் மோசமான வேலைக்காரர்கள்

ஆலயத்தை பழுதுபார்க்க பணம் சேகரிக்க ஆசாரியர்களிடம் பொறுப்பை கொடுத்தது எந்தவித பலனும் அளிக்கவில்லை என்பதை யோசியா ராஜா கண்டான். நல்ல இருதயமுள்ள மனிதர்கள் திறமைசாலிகளாக இருப்பதில்லை. ஆசாரியர்கள் அந்த காரியங்களுக்காக சேகரித்த பணத்தை நேர்மையற்ற முறையில் பயன்படுத்தினார்கள் என்று நமக்கு பதிவு கூறவில்லை; அவர்கள் ஞானமற்ற முறையில் அந்த பணத்தை செலவு

செய்தார்கள் என்றும் கூறவில்லை. ஜனங்கள் ஆசாரியர்கள் மேல் ஒரு வேளை நம்பிக்கை இல்லாததால் தாராளமாக ஆலயத்துக்கு கொடுக்கவில்லை. எனினும் ஆலயமானது இன்னும் பாழடைந்த நிலையிலேயே இருந்தது என்பதை கவனித்த ராஜா, ஆசாரியர்களை அழைத்து ஏன் நீங்கள் ஆலயத்தை பழுது பார்க்கவில்லை என்று கேட்டான். ஆசாரியரின் பதில் கொடுக்கப்படவில்லை. அவர்களிடம் ராஜா கூறியதாவது: "இனி நீங்கள் உங்களுக்கு அறிமுகமானவர்களிடத்தில் பணம் வாங்க வேண்டாம்." ராஜா காரியத்தை லேசாக எடுத்துக் கொண்டு, ஆசாரியர்களை மரியாதையுடன் நடத்தி, மோசடி செய்ததாகவோ அல்லது அசட்டை பண்ணியதாகவோ குற்றம் சாட்டவில்லை.

பணத்தை சேகரிக்க ஒரு புது முறைமை ஏற்படுத்தப்பட்டது. ஆலயத்தின் பலிபீடத்தண்டையில் ஜனங்கள் உட்பிரவேசிக்கும் இடத்தில் ஒரு பெட்டியை வைத்து அதிலே பணத்தை போட்டார்கள். வாசற்படியை காக்கிற ஆசாரியரிடம் அதன் பொறுப்பு இருந்தது. இந்த முறைமை வெற்றிகரமாக செயல்பட்டது. பணம் வேகமாக சேர்ந்தது. ஆலயத்தை பழுது பார்க்க போதுமானதாக இருந்தது. இந்த நோக்கத்திற்காக காணிக்கை மறுக்கப்பட்டது. ஆலயமானது நல்ல நிலைலைமையில் வைக்கப்பட்டு, அதன் பொதுவான ஆசீர்வாதம் கிடைத்தது.

இதில் நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. ஜனங்கள் பலன்களை பார்க்க விரும்பினார்கள். (1)அவர்கள் தரும சிந்தனையோடு கொடுக்கப்பட்ட பணம் எல்லாம் வேறு காரியங்களுக்கு பயன்படுத்தப்படாமலிருந்ததா என்பதை அறிய விரும்பினார்கள். (2) தானாக முன்வந்து கொடுக்கக் கூடிய காணிக்கைகள் தேவனுடைய மற்றும் மனிதர்களின் அங்கீகாரத்தைப் பெறுகின்றன. இது முகஸ்துதி செய்து, தொந்திரவு செய்து, வற்புறுத்தி, கெஞ்சி கேட்டு பரிசுத்தவான்களிடமிருந்தும் பாவிகளிடமிருந்தும் வாங்கிய காணிக்கை. கர்த்தருக்காக கொடுப்பவர்கள் அதன் மூலம் நன்மையை அடைந்தார்கள். அவன் தரும காரியத்துக்காக முன்வரவில்லை, ஆனால் தனது இருதயத்தில் பெருந்தன்மையான குணத்தை வளர்க்கிறான். நமது கர்த்தர் கூறியதாவது: "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்." கொடுப்பது தானாக மனமுவந்து இருக்க வேண்டும்.

சபை கெஞ்சி கேட்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் பெரிய தீங்கை செய்கிறது. மதத்தின் பிரதான காரியமே பணத்தை கெஞ்சி கேட்பது என்று குறிப்பிடப்படுகிறது. தனிப்பட்ட முறையிலோ, பொதுவாகவோ வேண்டுகோள் மூலமும் வசூல் பெட்டி மூலமும் பெறுதல் ஆகும். சபை கண்காட்டி, சபை இரவு விருந்து, பையை எடுத்துக்கொள்ளுதல் முதலானவை வசூல் பெட்டி, தனிப்பட்ட முறையில் கேட்பதைக்காட்டிலும் கண்டிக்கத்தக்கது. இப்படிப்பட்ட முயற்சிகளை யாரோ ஒருவர் "ஆடுகளிடம் பால் கறத்தல்" என்று அழைக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் செம்மறி ஆடாக இருக்க வேண்டும்; உலக ஜனங்கள் வெள்ளாடு.

வேத வாக்கியங்கள் கற்பிக்கிறதாவது: ஒவ்வொரு கிறிஸ்துவனும் தகுதிக்கும் ஊழியத்தில் அக்கறைக்கும் ஏற்றபடி கொடுக்க வேண்டும். ஆராதனை செய்யாதவர்கள் கொடுக்க எதிர்பார்க்கவோ, அவ்வாறு செய்ய கேட்டுக் கொள்ளப்படவோ கூடாது. சபை காரியங்களுக்காக சேகரிக்கப்படும் பணத்தில் பெரும்பாலான பகுதி, திட்டத்தில் விருப்பம் இல்லாதவர்கள் மற்றும் இதை எதிர்ப்பவர்கள் மூலமாக விருப்பமில்லாமல் கொடுக்கப்பட்டவை என்பது யாருக்குத் தெரியாது! வாடிக்கையாளரின் மனதை புண்படுத்துவதைக் காட்டிலும் புரட்டஸ்டண்ட் வர்த்தகர்கள் கத்தோலிக்க தொண்டு ஸ்தாபனத்திற்கு அடிக்கடி கொடுப்பார்கள். இதே போல கத்தோலிக்க வர்த்தகர் புரட்டஸ்டண்ட் ஸ்தாபனங்களுக்கு அவற்றின் மேல் தயை இல்லாமலேயே கொடுப்பார்கள்.

இது சுவிஷே அறிவுரைக்கு திரும்பும் நல்ல நேரமாக இருக்கிறது. தேவன் உங்களை செழுமையாக வைத்திருக்கிற அளவுக்குத் தக்கதாக வாரத்தின் முதல் நாளிலேயே மதம் மற்றும் தரும காரியங்களுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் எடுத்து வையுங்கள். இப்படி தானாக மனமுவந்து கொடுப்பதை தேவனுடைய அல்லது நல்ல மனிதர்களுடைய பார்வையில் சிறந்ததாக இருக்கும். அது விதவையில் சிறிய தொகையாகவோ அல்லது பணக்காரனின் பெருந்தொகையாகவோ இருந்தாலும் சரி இதனிமித்தம் இப்படிப்பட்டவர்கள் மட்டுமே தெய்வீக ஆசீர்வாதத்தை பெறுவார்கள்.

### ஆலயத்தின் சுவற்றில் உடைசல்கள்

ஆவிக்குரிய ஆலயத்தில் பெரும் நகரங்களில் சிறப்பான சபைகளில் வெளியரங்கமாக நாம் இப்பொழுது அனுபவிப்பதைக் காட்டிலும் அதிகமாக பெற முடியாது என்பதை நாம் உணருகிறோம். நமது காலத்தின் சபையின் நிலைமை குறித்து, விளக்குகையில் வேதவாக்கியங்கள் லவோதிக்கேயா சபை என்று இப்படியாக கூறுகின்றன: "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல, அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாய் இருக்கிறபடியால் உன்னை என் வாயிலிருந்து வாந்திப் பண்ணிப் போடுவேன். நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும் நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவான் என்றும் திரவிய சம்பன்னன் என்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை என்றும் சொல்லுகிறபடியால்; நான்; நீ ஐசுவரியவனாகும்படிக்கு நெருப்பிலே போடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்காக வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும்,நீ பார்வையுடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டும் என்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். "(வெளிப்படுத்தல் 3:15-18)

ஆகையால், இன்றைக்கு ஆலயம் ஆவிக்குரிய நிலைப்பாட்டின்படி பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. வெளியரங்கமாக சபையானது செல்வ செழிப்பாக இருக்கிறது. ஆனால் ஆவியிலே அது ஏழ்மையாக இருக்கிறது. பெரும்பாலான படித்தவர்களும், ஊழியக்காரர்களும் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் எல்லா விசுவாசத்தையும் விட்டுவிட்டார்கள். அவர்கள் இன்னும் மத நம்பிக்கை அற்றவர்களாக ஆகவில்லை. ஆனால் "உயர்விமர்சகர்கள்" மற்றும் "பரிணாம கொள்கையுடையோராக" ஆகிறார்கள். அநேகரிடம் கடவுள் நம்பிக்கையே ஆட்டங்காண்கிறது. எப்படியோ அறிவில்லாத தேவனை நாம் பெற்றிருக்கிறதில்லை என்பது குறித்து அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இயற்கை, மனுக்குலமற்ற அறிவுள்ள ஜீவிகள் அனைத்தும் வெறும் பரிணாமத்தினால் உண்டானவைகள் என்று நம்புகிறார்கள். இந்த பேரழிவான நிலைமைக்கான அடிப்படையும் காரணமும் வெகு தூரத்தில் இல்லை.

அறிவுள்ள நீண்ட நாட்கள் ஏற்றுக்கொள்ள முடியாதபடி "இருண்ட யுகத்தில்" ஏற்படுத்தப்பட்ட விசுவாச கோட்பாடுகளின் அபத்தங்கள் இருக்கின்றன. அந்த அளவுக்கு அதிகமாக இருக்கின்றன. இந்த அபத்தங்கள் எல்லாம் வேத வாக்கியங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டன. அவற்றை நன்கு ஆதரிக்கின்றன என்று சொல்லுகிற அளவுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த கால நமது விசுவாச கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்படுவதோடு கூட வேதாகமத்திற்கு முரண்பாடாக இருக்கின்றன என்பதே உண்மையாக இருக்கிறது. இதை நாம் கற்றுக்கொள்ளவும் நம்பவும், நாம் நமது இருதயத்தை தேவனுக்கு நேராக உயர்த்தி, நமது பிதாக்கள் நீக்கிய நிறங்களுடனான கண்ணாடிகளை பயன்படுத்தி வேதாகம ஆராய்ச்சிக்கு திரும்ப வேண்டும். அதன் மூலம் யுகத்தின் கடைசியில் தமது உண்மையுள்ள ஜனங்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற வெளிச்சத்தை அவர் நமக்கு கொடுக்கக்கூடும். இதைக் குறித்து வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அந்த உறுதியான தீர்க்கதரிசன வசனத்தை கவனிக்க வேண்டும்." (2பேதுரு 1:19)

### இந்த நேரத்திற்கான கடமை

தேவனுடைய வீட்டின் ஆவிக்குரிய குறைபாடுகளை, கர்த்தரை நேசித்து அவரை ஆராதிக்கிற சபையாகிய அனைவரும், இந்த ஆவிக்குரிய நிலைமைகளின் முன்னேற்றத்திற்காக தம்முடைய பங்கை செய்ய வேண்டும். மத குரு அல்லது பாதிரியாரின் கைகளில் இதை விட்டுவிடக்கூடாது. பொதுவாக ஜனங்கள் நிலைமையை உணர்ந்து கொண்டு, சீயோனின் ஆவிக்குரிய சுவர்களை திரும்ப எடுத்துக் காட்டுவதற்கான தமது பங்கை செய்ய விரும்ப வேண்டும். இந்த ஆவிக்குரிய சுவர்கள் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசமாக" இருக்கின்றன.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த பழுது பார்த்தலுக்கு இசைவாக நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளவேண்டும். சத்தியம் மற்றும் நீதிக்கான எனது வைராக்கியத்தையும் அசத்தியம் மற்றும் பாவத்திற்கான எனது வெறுப்பையும் கர்த்தருக்கு நான் எப்படி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன்? "இருண்ட காலத்தின்" முறைமைகளும் விசுவாசக் கோட்பாடுகளும் என்னதான் பண்ணியிருந்தாலும், சத்தியத்தை புரிந்து கொள்ளவும் மற்றவர்களும் அதை புரிந்து கொள்ளுவதற்கும் உதவவும் நாம் இரட்டிப்பாக செய்ய வேண்டும் என்பதே இந்த கேள்விக்கான பதிலாக இருக்கிறது.

**R4778**

## 1911 - MEMORIAL SUPPER - 1911

## 1911–இராப்போஜன நினைவுகூருதல் – 1911

ஒரு வாரம் நீடிக்கக்கூடிய யூதர்களின் பஸ்கா இந்த வருடம் (1911) ஏப்ரல் 13, வியாழக்கிழமை ஆரம்பிக்கிறது. அதன் யூத கணக்கீடு முதல் மாதம் 15ஆம் தேதியாகும். யூத கணக்கீட்டின்படி ஒரு நாள் என்பது மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. இதன்படி 15ஆம் தேதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. புதன்கிழமை ஏப்ரல் 12ஆம் தேதி முதல் மாதத்தின் 14ஆம் தேதியாக இருக்கிறது. அதன்படி அது ஏப்ரல் 11ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. இப்படியாக அது கர்த்தரின் முதலாவது இராப்போஜன ஆசாரிப்பின் வருடாந்திர நாளாக இருக்கிறது.

காவற்கோபுரத்தின் வாசகர்கள் நமது இரட்சகரின் மரணத்தின் வருடாந்திர நாளை உலகம் முழுவதும் ஆசாரிப்பது வழக்கமாக இருக்கிறது. இந்த வருடத்தின் ஆசாரிப்பு ஒரு பொதுவானதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். நினைவு கூருதலின் முக்கியத்துவம் பிப்ரவரி 1ஆம் தேதி பிரதியிலும், வேதாகம பாடங்கள் 6ஆம் தொகுதியிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் 11ஆம் தேதி மாலை 7.30 மணிக்கு புரூக்லின் ஆலயத்தில் நியூயார்க் சபை நினைவுகூருதலை ஆசரிப்பதற்காக கூடுகிறது. கர்த்தரிடத்தில் இருதய பூர்வமான ஐக்கியம் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களையும் அதில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். எனினும் அதே சமயம் மற்ற சபையின் சகோதரர்கள் யாரையும் விசேஷமாக அழைக்கவில்லை. கர்த்தரின் பிள்ளைகளின் வீட்டார் அல்லது ஒவ்வொரு சபையும் இதைக்குறித்த கர்த்தரின் வார்த்தைகளின் போதனைகளை அறிந்திருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஏப்ரல் 9ஆம் தேதி நினைவு கூருதலுக்கு முன் வரக்கூடிய ஞாயிறு அன்று புரூக்கிளின் ஆலயத்தில் மாலை 3 மணிக்கு ஞானஸ்நான ஆராதனை இருக்கும். ஞானஸ்நானத்தை பற்றிய பாடம் வேதாகம பாடங்கள், 6ஆம் தொகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த அடையாளத்தில் பங்குபெற வேண்டும் என்கிற எல்லா எண்ணமும் இந்த பாடத்தைப் பற்றிய மிகவும் நல்ல ஆராய்ச்சி தேவைப்படுகிறது. சரியான அறிவுடன் அதில் பங்குபெற வேண்டும்.

நினைவுகூருதலுக்கு முன்னதாக, முடிந்தால் வேத மாணவர்களின் கூடுகையில் ஞானஸ்நான சந்தர்ப்பத்தை தர வேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். நினைவுகூருதலின் ஆசாரிப்பு ஒரு மாபெரும் சலுகையாக மதிக்கப்பட வேண்டும். யாராவது கர்த்தருடன் இருதய ஐக்கியத்தில் இல்லையென்றால் முதலாவது அவரை நீக்க வேண்டும். ஒருவர் கர்த்தருடைய பலிபீடத்திற்கு வரவேண்டும் என்றால் முடிந்தவரை வருவதற்கு முன்னால் அனைத்து "விசுவாச வீட்டாருடன்" இருதய ஐக்கியத்திற்குள் வரவேண்டும் என்று அவர் கூறுகிறார். ஆகையால் இதுவே இருதயத்தை தேடுகிற மற்றும் பரிசுத்தம் பண்ணுகிற நேரமாக இருக்க வேண்டும். இது யூத பஸ்காவில், புளிப்பை தேடி அதை நீக்குகிற அடையாளத்தில் காட்டப்பட்டுள்ளது. புளிப்பு என்பது பரிசுத்தம், நீதி மற்றும் அன்புக்கு எதிரான பாவம் மற்றும் அசுத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

இந்த காலப்பகுதியில் ஒருவர் கர்த்தருடன் நல்லிணக்கம் இல்லாதிருந்து, மேலே சொல்லப்பட்டிருக்கிற யோசனைப்படி, சலுகையை பயன்படுத்தும்படி தேவனுடைய சலுகைக்கு திரும்பி வர நாடினால் நிச்சயமாக அவர் ஒரு பெரும் ஆசீர்வாதத்தை அனுபவிப்பார். இந்த சந்தர்ப்பத்தை கடந்து சென்றால், யாரும் இழக்கக்கூடாத ஒரு ஆசீர்வாதத்தை இழப்பார். அப்படிப்பட்ட சமயத்தில் நமது சொந்த பலவீனங்களை உணருவது நம்மை அதைரியப்படுத்தவோ உற்சாகம் குன்றச் செய்யவோ கூடாது. அதைவிட நமது மாபெரும் பரிகாரியின் மூலம் தேவனுடன் நல்லிணக்கத்திற்காக தேவனுடைய கிருபையை நினைவுகூர வேண்டும். நமது பரிகாரியின் மரணத்தைத்தான் நாம் நினைவுகூருகிறோம். மேலும் நம்மை கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக்கிய பலியின் உடன்படிக்கையை நாம் நினைவுகூருவோமாக.

இந்த பஸ்கா காலத்தில் கரத்தருடைய அர்ப்பணம் செய்த ஜனங்களை சோதிப்பதற்கு சாத்தான் விசேஷித்த வல்லமையை பெற்றிருப்பதை சில வருடங்களாக நாம்

காண்பதை நமது வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துவது தவறாக இருக்காது. நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட இந்த காலத்தில் சாத்தான் விசேஷித்த வல்லமையை பெற்றிருக்கிறான். அப்பொழுது யூதாஸ் அடிபணிந்தார். பரிசுத்த பேதுரு மோசமாக இடறினார். மற்ற அப்போஸ்தலர்கள் அனைவரும் ஆண்டவரை கைவிட்டு ஓடி விட்டனர். அவர்கள் பெந்தெகொஸ்தே வரை ஆழ்ந்த குழப்பத்தில் இருந்தனர். "நீங்கள் சோதனைக்கு உட்படாத படிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்கிற ஆண்டவரின் புத்திமதி இப்பொழுது நல்லதாக இருக்கிறது.

**R4778**

## SOME CALCULATIONS ON THE JUBILEE CYCLE
## யூபிலி சுற்றைக் குறித்த சில கணக்கீடுகள்

அன்பான சகோதரன் ரசல் அவர்களுக்கு:

யூபிலி சுற்றைக் குறித்த இஸ்ரயேலர்கள் கானான் தேசத்தில் நுழைந்ததிலிருந்து கணக்கிடப்பட்ட உங்களது கணக்கீடு (ஓவர் லேண்டு மந்த்லியில் 1910 செப்டம்பர் பிரதியில் பிரசுரிக்கப்பட்டது) குறிப்பிடத்தக்க வகையில் மிகவும் எளிமையாக இருக்கிறது. இது என் கவனத்திற்கு வராதது குறித்து நான் ஆச்சரியம் அடைகிறேன். இந்த சேர்க்கப்பட்ட புதிய கண்ணோட்டத்தில் முன்னர் எனக்கு புதிராயிருந்த சில சந்தேகங்கள் என் மனதில் மிகவும் தெளிவடைந்திருக்கிறது. இதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அவைகள் பின்வருமாறு:

1. முழுமையாக 70 யூபிலிகள் நிறைவடையும்படியாக, மாபெரும் 50 யூபிலி சுற்றுகளை இஸ்ரயேலர்கள் கணக்கிட ஆரம்பிப்பதற்கு முன்னரே, தேசத்தில் ஏன் 20க்கு பதிலாக 19 யூபிலிகளை இஸ்யேலர்கள் அனுசரித்தார்கள்?
2. யூதர்கள் அவர்களது கடைசி நிழலான யூபிலியை ஆசரித்த பிறகு ஏன் அவர்கள் 19 வருடங்கள் தேசத்தில் இருந்தார்கள்? ஏன் அவர்கள் உடனே சிறையிருப்புக்கு செல்லவில்லை?
3. 70 வருடங்கள் பாழ்கடிப்பு எதையாவது நிழலாக காண்பித்திருக்கிறதா? அப்படி இருந்தால் எதை காண்பிக்கிறது?

நீங்கள் ஓவர்லேண்டு மந்திலியில் பிரசுரித்த கட்டுரையினால் இந்த கேள்விக்கான தீர்வுகளை நான் பெற்றிருக்கிறேன். இத்துடன் என்னுடைய கணக்கீடுகளையும் முடிவுகளையும் உங்களது கருத்துக்களுக்காகவும் பரிந்துரைகளுக்காகவும் நான் உங்களுக்கு அனுப்புகிறேன்.

### முதலாவது கணக்கீடு

ஓவர் லேண்டு மந்திலியில் நீங்கள் பிரசுரித்திருந்த கணக்கீடுகளை நான் புரிந்து கொண்டது இதுதான்:

"கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு , தேசம் தன்னுடைய ஓய்வு வருடங்களை இரம்மியமாய் அனுபவித்து தீருமட்டும், அது பாழாகிக்கிடந்த நாளெல்லாம் அதாவது எழுபது வருஷம் முடியும் மட்டும் ஓய்ந்திருந்தது. "(2நாளாகமம் 36:17-21)

மேலே சொல்லப்பட்டதிலிருந்து, இஸ்ரயேலுக்காக தேவன் நியமித்திருந்து முழு யூபிலி வருடம் 70 என்று நாம் காண்கிறோம். அது 70 சுற்றுகளை அல்லது காலப்பகுதியை குறிப்பிடுகிறது. ஒவ்வொரு சுற்றும் 49 வருடங்கள் 50வது வருடம் யூபிலி வருடம்.

70 தடவை இந்த எண்ணின் (50 வருடங்கள்) கணக்கு ............................................................3500 வருடங்கள்

இஸ்ரலேயர்கள் கானான் தேசத்திற்கு நுழைந்ததிலிருந்து ...............................கிபி 1வரை .............1575 வருடங்கள்

ஆகையால் கிபி 1லிருந்து மேலே குறிப்பிடப்பட்ட 3500 வருடங்கள் முடிவடைய .................... 1925 வருடங்கள் அல்லது கிபி 1925, எரேமியா தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் குறிப்பிட்டபடி இஸ்ரயேலின் யூபியிலின் முழு எண்ணிக்கையையும் நிறைவேற்றுகிற தேதியை குறிக்கிறது.

### இரண்டாவது கணக்கீடு

இந்த கணக்கீடு, இஸ்ரயேருலுக்கு ஒரு தேசமாக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண நிலைப்பாட்டை அடிப்படையாக கொண்டது. இந்த நியாயப்பிரமாணத்திற்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டும். யூதர்களைப் பொருத்தவரை அது நிறைவேறியும் இன்னும் நிறைவேற்றிக்கொண்டும் இருக்கிறது. (லேவியராகமம் 26)

இந்த கணக்கீடு, வேதாகம பாடங்கள், தொகுதி 2, பக்கம் 191,192 இல் கொடுக்கப்பட்டுள்ளவைகளுக்கு எந்த வகையிலும் எதிரானது அல்ல. ஆனால் அது யூத தேசம், யூத ஜாதியை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளது. தொகுதி 2இல் கொடுக்கப்பட்டுள்ள மெய்யான யூபிலியாகிய இழந்ததை திரும்ப கொடுக்கக்கூடியதைப் பற்றி கூறவில்லை.

7ஆம் நாளை அல்லது ஓய்வு நாளை 7ஆல் பெருக்கினால் (7x7=49) அது தொடர்ந்து வருகிற 50வது நாள், பெந்தேகோஸ்தே நாளை அல்லது யூபிலி நாளை குறிப்பிடுகிறது.

ஓய்வு வருடத்தை அல்லது 7ஆம் வருடத்தை 7ஆல் பெருக்கினால் 7x7=49. அது ஒரு சுற்றை ஏற்படுத்தி யூபிலி வருஷத்தை அல்லது 50வது வருஷத்தைக் குறிப்பிடுகிறது.

யூபிலி வருடத்தை அல்லது 50வது வருடத்தை 50ஆல் பெருக்கினால் (50x50=2500) அது ஒரு சுற்றை ஏற்படுத்தி 51வது சுற்றை அல்லது யூபிலி சுற்றைக் குறிப்பிடுகிறது.

யூபிலி நாள் கடைசி நாளில் அல்லது 49வது நாளில் ஆசாரிக்கப்படாமல், அதைத் தொடர்ந்து வருகிற 50வது நாளில் ஆசாரிக்கப்படுகிறது. யூபிலி வருடமும் கடைசி வருடமாகிய 49வது வருடத்தில் ஆசரிக்கப்படாமல் அதைத் தொடர்ந்து வருகிற 50வது வருடத்தில் ஆசரிக்கப்பட்டது. அதே போல யூபிலி சுற்று (50வது வருட) கடைசி சுற்றில் அல்லது 50வது சுற்றில் கொண்டாடப்படாமல் அதைத் தொடர்ந்து வருகிற 51வது சுற்றில் கொண்டாடப்படும்.

நியாயப்பிரமாணத்தின்படி நிழலான முறைமை முடியும் போது உண்மையான முறைமை ஆரம்பிக்க வேண்டும்.

மாபெரும் சுற்றில் மொத்த வருடங்கள் ......... 2500 வருடங்கள்

இஸ்ரயேல் கடைசி யூபிலியை ஆசரித்ததிலிருந்து ....................................கிபி1வரை ............... 625 வருடங்கள்

2500 வருட சுற்றை முடிக்க கிபி 1லிருந்து .........................தேவையான வருடங்கள் ..... 1875வருடங்கள்

50x50இன் மாபெரும் சுற்றின் முடிவை கிபி 1875ஐ குறித்தால். அதைத் தொடர்ந்து வருகிற 50 வருடங்கள் அல்லது கிபி 1875 முதல் கிபி 1925 யூபிலி சுற்றாக அல்லது யூதர்கள் திரும்பி வந்து தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுகிற காலமாக இருக்கும், (இந்த தேதி கிபி 1925, நாம் பார்த்திருக்கிறது போல தேவன் ஆதியிலே இஸ்ரயேலர்களின் முழு எண்ணிக்கையான சுற்றுக்களை குறித்து வைத்ததாகும்) இது எப்படி புறஜாதியார் காலத்தின் முடிவுக்கு இசைவாக பொருந்தி வருகிறது. இந்த யூபிலி காலத்தில் அது புறஜாதியாரின் ஆளுகையை நீக்கிப் போடுகிறது, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதி நீக்கப்படுதல் யூதர்களின் மேல் நியாயப்பிரமாண நிறைவேறுதலை அனுமதிக்கிறது, யூதர்கள் சுதந்தரித்துக் கொள்ள இப்பொழுது வரலாம்.

மாபெரும் சுற்றை (50x50 வருடங்கள் = 2500 வருடங்கள்) எண்ணுவதற்கு ஆரம்பிப்பதற்கு முன்னதாக 20 சுற்றுகளை கொண்டாடாமல் 19 சுற்றுகளை கொண்டாடியதற்கான சாவியை நாம் இங்கே பெறுகிறோம். கடைசி சுற்று அல்லது 50 வருடங்களின் 20வது சுற்று யூபிலி சுற்று மாபெரும் சுற்றை தொடர்வதற்காக ஒதுக்கப்பட்டது.

...யூதர்கள் தேசத்தில் கொண்டாடப்பட்ட யூபிலிகள்..........19
...மாபெரும் சுற்றில் குறிக்கப்பட்ட யூபிலிகள்..................50
யூதர்கள் யூபிலி கொண்டாட்டத்தின்படி அவர்கள்
திரும்பி வந்து சுதந்தரித்துக் கொள்ள வேண்டிய
காலப் பகுதி ................................................................... 1
மொத்தம் .......................................................................70

**மூன்றாவது கணக்கீடு**

"ஐம்பதாம் வருஷத்தை பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதன் குடிகளுக்கெல்லாம் விடுதலைக் கூறக்கடவீர்கள்; அது உங்களுக்கு யூபிலி வருடம்; அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்துக்கும் திரும்பிப் போகக்கடவன். அந்த ஐம்பதாம் வருடம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக; அதிலே விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காமலும் விடப்பட்ட திராட்சை செடியின் பழங்களை சேர்க்காமலும் இருப்பீர்களாக." (லேவியராகமம் 25:10,11)

இங்கே யூபிலி வருடத்தைக் குறித்து இரண்டு அறிக்கைகள் கொடுக்கப்படுகின்றன.

1.ஒவ்வொவரும் தன் தன் காணியாட்சிக்கு திரும்ப வேண்டும்.
2. நிலம் ஓய்ந்திருக்க வேண்டும்.

"நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும் போது, தேசமானது பாழாய்க்கிடக்கிற நாளெல்லாம் தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அனுபவிக்கும்; அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அனுபவிக்கும். ஏனெனில் நீங்கள் அதிலே குடியிருக்கும் போது அது உங்கள் ஓய்வு காலங்களில் ஓய்வடையவில்லை." (லேவியராகமம் 26:34,35)

இங்கே கூட இஸ்ரயேலர்கள் தங்கள் தேசத்தில் குடியிருந்த போது யூபிலியை கொண்டாடினார்கள் என்றும் யூபிலி காலத்தில் அவனவன் தன் காணியாட்சிக்கும் குடும்பத்திற்கும் திரும்பினான் என்றும் காண்கிறோம். எனினும் அவர்கள் தங்கள் தேசத்தில் குடியிருந்த போது தேசம் ஓய்வு வருடங்களில் "ஓய்ந்திருக்கவில்லை" என்று கர்த்தர் அறிவிக்கிறார்.

ஆகையால் இஸ்ரயேலர்கள் 70 வருடங்கள் சிறையிருப்புக்குச் சென்ற போது கர்த்தர் யூபிலியின் அம்சமாகிய ஓய்வை தேசத்திற்கு கொடுத்தார். இங்கே 70 யூபிலிகளின் ஓய்வு தேசத்திற்காக நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்த காலப்பகுதியில் யூபிலியின் மற்ற அம்சம் புறக்கணிக்கப்பட்டது. (ஒவ்வொருவரும் தனது காணியாட்சிக்கும் தனது குடும்பத்திற்கும் திரும்புவது) ஏனெனில் இந்த நிலைமையின் தலைகீழ் உண்மை என்று நாம் காண்கிறோம். அந்த காலப்பகுதியில் யூதர்கள் அவர்கள் தேசத்திற்கு வருவதற்கு பதிலாக பாபிலோன் ராஜாவுக்கு அடிமைப்பட்டு ஊழியம் செய்தார்கள்.

பிறகு எப்படி, எப்பொழுது, யூபிலியின் இந்த திரும்புகிற அம்சம் நிறைவேற்றப்படும்?

வேதாகமப் பாடங்கள், தொகுதி 2, அத்தியாயம் 6இல் காண்பிக்கப்பட்டபடி, இஸ்ரயேலர் 19 யூபிலிகளை சிறையிருப்புக்கு போவதற்கு முன்பு கொண்டாடினார்கள். இந்த ஒவ்வொரு கொண்டாட்டத்திலும் ஜனங்கள் அவர்களது காணியாட்சிக்கு திரும்புவது அவர்களுக்காக முடிந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டது என்பதில் நாம் சந்தேகப்படுவதற்கு நமக்கு காரணமில்லை.

இப்பொழுது தேசத்திற்கு (சிறையிருப்பு காலத்தில்) யூபிலி ஓய்வுகள் அல்லது ஓய்வு வருடங்கள் 70 ஆக இருந்தது. ஆனால் 19 யூபிலி அல்லது வருடங்கள் மட்டுமே திரும்பி வருகிற அம்சம் கொண்டாடப்பட்டன. மற்ற 51 யூபிலி அல்லது வருடங்களின் திரும்பி வருகிற அம்சம் எப்பொழுது நிறைவேற்றப்படும். நாங்கள் பதிலளிக்கிறோம் :

70 ....தேவனால் நியமிக்கப்பட்ட யூபிலி சுற்றுக்களின்
...எண்ணிக்கை
19 ...யூபிலியுடன் கொண்டாடப்பட்ட சுற்றுகள் (ஒவ்வொன்றும்
50 வருடங்கள்) ........................... 950 வருடங்கள்
51.....யூபிலி இல்லாமல் கொண்டாடப்பட்ட சுற்றுகள்
(ஒவ்வொன்றும் 49வருடங்கள்)..... 2499 வருடங்கள்
மொத்த வருடங்கள் .............................................. 3449
இஸ்ரலேயர்கள் கானான் தேசத்திற்குள் நுழைந்ததிலிருந்து கிபி 1வரை .................................................1575 வருடங்கள்
கிபி 1லிருந்து மேலே சொல்லப்பட்ட 3449 வருடங்களை முடிப்பதற்கு தேவையான வருடங்கள் ......... 1874 வருடங்கள்

அல்லது கிபி 1874 என்பது மேலே சொல்லப்பட்டட காலப்பகுதி நிறைவேறின வருடம். இந்த தேதி 1874, கிபி 1925க்கு 51 வருடங்கள் முன் உள்ள தேதி. முதலாவது கணக்கீட்டில் அது இஸ்ரலேயர்கள் யூபிலியை முடிக்கும் தேதியாக யேகோவா தேவனால் ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

முதல் 19 சுற்றுகள் தனித்தனியாக கொண்டாடப்பட்டது போல 51 யூபிலிகள் அல்லது வருடங்கள் ஒரே சமயத்தில் கொண்டாடப்பட்ட வேண்டியதாக இருந்தது. நமது பரலோக பிதாவின் ஞானம் எப்படிப்பட்டதாக இருக்கிறது! (இஸ்ரயேலர்கள் பாபிலேனில் சிறையிருப்பில் ஊழியம் செய்யும் போது) தேசமானது யூபிலியின் ஓய்வு அம்சத்தை அனுபவித்திருந்தது. இப்பொழுது இஸ்ரயேலர் 51 யூபிலி சுற்றுக்களின் (ஒவ்வொன்றும் 49 வருடங்கள்) திரும்பி வரும் அம்சமாகிய பறிக்கப்பட்ட சலுகையை, 51 யூபிலிகள் திரும்பி வரும் சலுகையை கிபி 1874 முதல் கிபி 1925 வரை கொண்டாடலாம். இது முழுவதுமாக உறுதி செய்யப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். ஏனெனில் 1874 இல் முதலாவது யூத காலனி பாலஸ்தினாவில் ஸ்தாபிக்கப்பட்டன. (ஓவர் லேண்டு மந்திலி, செப்டம்பர் 1910, பக்கம் 324, 7வது வரி மேலிருந்து) ஒவ்வொரு வருடமும் யூதர்கள் தங்களது தேசத்திற்கு திரும்பி வருவது அதிகரித்திருப்பதையும் இந்த 51 யூபிலிகளின் நோக்கம் நிறைவேறி வருகிறதை நாம் காண்கிறோம்.

இஸ்ரயேலர் கடைசி யூபிலியை கொண்டாடிய பிறகு ஏன் 19 வருடங்கள் தேசத்தில் இருந்தார்கள் என்பதற்கான பதிலை, எனது மனதில் உள்ளதை கீழே தருகிறேன்:

**இது அதிக தொடர்பில்லாததா?**

வேத வாக்கியங்களில் ஒரு நாள் என்பது ஒரு வருடத்தை அடையாளமாக குறிப்பிட்டால், 7 நாட்கள் இஸ்ரயேலுக்கு ஓய்வை குறிப்பிட்டு, அது ஒரு 7 வருட முறைமைக்கு எடுத்துச் செல்லப்பட்டால், வருடமானது அடையாளமாக அடுத்த பெரிய கால அளவை அல்லது காலச்சுற்றை அடையாளமாக குறிப்பிடாதா? அப்படியான நிழலான அம்சம் நிறைவடைந்த பிறகு, மகா மெய்யான சுற்று எண்ணப்பட ஆரம்பித்தது. இஸ்ரயேலர் 19 வருடம் தேசத்தில் இருந்தது மற்றும் 70 வருட சிறையிருப்பு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவர்களது தேசத்தில் இஸ்ரயேலர் கொண்டாடிய 19 யூபிலி

சுற்றுகளையும், 70 சுற்றுகள் அல்லது (70x50=3500) 3500 வருடங்கள், அவர்கள் தங்களது தேசத்தை முழுவதுமாக சுதந்தரித்துக் கொள்வதற்கு முன்பு 3500 வருட சிறையிருப்பையும் சரியாக குறிப்பிடுகிறது அல்லது நிழலாக காட்டுகிறது.

70 சுற்றுகளில் உள்ள வருடங்கள் ............3500 வருடங்கள்

இஸ்ரயேலர் தங்களது கடைசி யூபிலியை

கொண்டாடியதிலிருந்து கிபி 1வரை............... 625 வருடங்கள்

கிபி 1லிருந்து 70 சுற்றுகள் முடிவடையும்

வருடங்கள்............................................2875 வருடங்கள்

இந்த கிபி 2875 வருடம் 1875லிருந்து 1000 வருடங்களைக் குறிக்கிறது. இது இஸ்ரயேலர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வர ஆரம்பிக்கிறதைக் குறிக்கிறது. அந்த சமயத்தில் கர்த்தரின் உறுதியான தீர்க்கதரிசனத்தின்படி யூதர்களும் மனுக்குலமும் அவர்கள் தேசத்தில் நிர்மாணிக்கப்படுவது மாத்திரமல்ல, சுதந்தரித்துக்கொள்ள தகுதியுள்ளவர்களாக இருந்து, சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். இதுவே ஆபிரகாமும் அவரது வித்தும் என்றென்றைக்கும் சுதந்தரித்துக் கொள்ளுவதாக இருக்கும்.

சத்தியத்தில் உண்மையுள்ள உங்கள் அன்பு சகோதரன்,

ஹால் கவுப்

(Hal Koup)

**R4780**

## THE WISE CHOICE
## ஞானமான தேர்வு

“யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.” –யோசுவா 24:15

இஸ்ரயேலர்கள் யோர்தானை கடந்திருந்தார்கள். மோசே மரித்துவிட்டார், யோசுவாதான் அவர்களது தலைவராக இருந்தார். அந்த சமயத்தில் அவர்களுக்கு கஷ்டம் ஏதுமில்லை. ஆகையால் கர்த்தருக்கு உண்மையாக இருப்பதா அல்லது இல்லையா அல்லது கானானியர்கள் பின்பற்றின சிலை வழிப்பாட்டை பின்பற்றுவதா என்பதை அவர்கள் முடிவு செய்வதற்கு இதுவே சரியான நேரம் என்று யோசுவா நினைத்தார். யோசுவா அவர்களை அழைத்து கூடிவரச் செய்து, அவர்கள் அனுபவித்த மாபெரும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும் ஆதரவுகளையும் எடுத்துக்கூறி, அதன்பிறகு நமது தலைப்பு வசனத்தின் உயர்ந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தினார்.

ஆகையால் அன்பான நண்பர்களே, கடந்த காலத்தில் கர்த்தர் நமக்கு அளித்து வந்த ஆசீர்வாதங்களையும், பாதுகாத்து பராமரித்து வந்ததையும் உணர்ந்து வாழ்க்கையில் எந்த மார்க்கத்தை பின்பற்றுவீர்கள் என்பதை தீர்மானியுங்கள். நீங்கள் நல்ல தீர்மானத்தை எடுத்தால் குணலட்சணங்களை உருவாக்குவதில் மாபெரும் ஆசீர்வாதமும் உதவியும் கிடைக்கும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எந்த காரியத்தைக் குறித்தும் நாம் ஒரு ஞானமான தீர்மானத்தை எடுத்தோமானால், அது நமது மனதையும் குணலட்சணத்தையும் பலப்படுத்தி, ஒரு வேளை அடுத்த சோதனைக்கு நம்மைத் தயார்படுத்தும்.

கிறிஸ்தவர்கள் செய்யும் முழு அர்ப்பணம் எதையும் விட்டு வைக்கிறதில்லை என்கிற உண்மையை நாம் அங்கீகரிக்கிறோம். ஆனால் மனமானது சீக்கிரமாக ஒரு முடிவை எடுப்பதற்கு ஒரு உரைகல் நமக்கு தேவைப்படுகிறது. இந்த உரைகல் தேவனுடைய சித்தமாக இருக்க வேண்டும். அதன் மூலம் எந்த காரியத்தைக் குறித்தும் தாமதமில்லாமல் தேவனுடைய சித்தத்தை உணர வேண்டும். மறுபடியும் நமது அர்ப்பணத்தை உறுதிப்படுத்துவது மிகவும் சரியானதாக இருக்கும். இப்படியாக மற்றவர்களுக்கு முன்பாக பிரபலப்படுத்த வேண்டும்.

உதாரணத்திற்கு, இது புது வருட நாளாக இருந்து, நாம் சாட்சிக்கூட்டத்தில் இருந்தால், வேறு யாராவது என்ன செய்தாலும் நான் தேவனையும் அவருக்கு ஊழியம் செய்வதையுமே அங்கீகரிப்பேன் என்று கூறுவதில் தவறு ஏதும் இல்லை. இது புது தீர்மானம் இல்லை. நமது அர்ப்பணத்தின் ஒரு புதிய அங்கீகாரம். இது முன்னரே எடுத்த தீர்மானமாக இருக்கிறது.

ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் புது உடன்படிக்கைக்கும் நமது உடன்படிக்கையை அனுதினமும் புதுபித்தலுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒன்று முறையற்றதாக இருக்கும்; இன்னொன்று சரியானதாக இருக்கும்.நாம் நமது ஜீவன் உள்ளவரைக்கும் உடன்படிக்கையை செய்திருந்தால், அதை உடைப்பது பற்றி நினைக்கவே கூடாது. அது ஒரு மனிதன் ஒரு வீட்டை விற்றது போல அல்லது குத்தகைக்கு விடப்பட்டது போல இருக்கும்.

அனுதினமும் கர்த்தருடனான நமது உடன்படிக்கையை நாம் புதுப்பிக்க வேண்டும். புதுப்பித்து நமது மனதில் அதை புதியதாக்க வேண்டும். இப்படியாக நமது பங்கில் எந்த மாற்றமும் இல்லை என்று காண்பிக்க வேண்டும். அதாவது இன்னும் நாம் அதே மனோபாவத்தில் இருக்கிறோம் என்பதை காண்பிக்க வேண்டும். இது நாம் அர்ப்பணம் செய்த போது இருந்த அதே சிந்தையாகும். நாம் கிறிஸ்துவுடன் இருக்கிறோம். “நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல, நீங்கள் கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்கள்.” நமது ஜீவியத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் நமது உடன்படிக்கையை அனுதினமும் புதுப்பிக்க வேண்டும் என்றும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். இதை நமது இருதயத்துக்கும் மனதுக்கும் முன்பாக தொடர்ந்து வைத்துக்கொள்ளவும், நமது பலியை கர்த்தருக்கு செலுத்தவும் அறிவுறுத்தப்படுகிறோம். இப்படியாக நாம் அவருடைய மரணத்துக்குள்ளான ஞானஸ்நானத்தை நாம் பெற்றிருக்கிறோம். இந்த ஞானஸ்நானம் நமது கர்த்தருடையதைப் போல தொடர்கிறது. அவர் அர்ப்பணம் செய்திருந்தார். ஆகையால் அது நிறைவேற்றப்பட வேண்டும். அதே போல நாமும் நிறைவேற்ற வேண்டும். நமது அர்ப்பணம், நமது உறுதிமொழி மரணபரியந்தம் இருக்கிறது.

அர்ப்பணம் செய்த கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்க்கையின் பிரதான நோக்கமெல்லாம் ஒருபுள்ளிக்கு கொண்டு வரப்பட்டால், கர்த்தருடைய ஆவியை, பரிசுத்தத்தின் ஆவியை, சத்திய ஆவியை , கிறிஸ்துவின் ஆவியை, பலமும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை அதிக அளவில் அவர்களது ஜெபத்தில் கேட்டால் எவ்வளவு ஓர் ஆசீர்வாதமாக இருக்கும்! அவர்கள் அவருடன் விடியும் வரை போராடினால், அவர்கள் விரும்பிய ஆசீர்வாதங்களை நிச்சயமாய், கொண்டு வரும். அந்த ஆசீர்வாதத்தை கொடுக்கும் நோக்கத்தை கர்த்தரே வெளிப்படுத்துவார். ஆனால் நாம் அதை உணர்ந்து விரும்பும் வரை அதை நிறுத்தி வைக்கிறார்.

R4781

# A SNARE - A TRAP - A STUMBLING BLOCK

# ஒரு கண்ணி – ஒரு பொறி – ஒரு இடறுதற்கான கல்

"அவர்களுடைய பந்தி அவர்களுக்கு சுருக்கும், கண்ணியும் இடறுதற்கான கல்லும் பதிலுக்கு பதிலளித்தலுமாகக் கடவது; காணாதபடிக்கு அவர்களுடைய கண்கள் அந்தகாரப்படக்கடவது; அவர்களுடைய முதுகை எப்பொதும் குனியப் பண்ணும் என்று தாவீதும் சொல்லியிருக்கிறான்." ரோமர் 11:9,10

ஒரு சமயத்தில் இந்த வார்த்தைகள் நீதியுடனோ அல்லது அன்புடனோ சரி செய்ய முடியாதது போல காணப்பட்டது. பலவீனமான யூதர்கள் நித்திய ஆக்கினை என்ற போதகத்தினால் ஒரு வேளை குருடாக்கபட்டு, இடறுதல் அடைந்திருந்தால், தேவனுடைய நடத்தை அறிவுக் கெட்டாததாக காணப்படுகிறது. அப்போஸ்தலர் மூலமாக, சபையில் தெரிந்து கொள்ளப்பட்ட புற ஜாதியாரின் நிறைவு உண்டான பிறகு, இஸ்ரயேலரின் மனக்கடினம் நீக்கப்பட்டு தெய்வீக கிருபைக்கு கொண்டு வரப்படுவார்கள் என்று உறுதியளிக்கப்படுகிறோம். (வசனம் 26,26)

ஒரு மனிதன் நித்திய துன்பத்திற்கு சென்றால் அவனது சந்ததியினர் அவனது சொந்த இழைப்பை ஈடுகட்டவே முடியாது. பிரஸ்பட்டேரியன் கருத்தில் பயிற்சி பெற்றிருந்தாலும், "அப்படியானால் என்ன? இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமல் இருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்." இடறியிருக்கிறார்கள், கண்ணியில் பொறியில் அகப்பட்டிருக்கிறார்கள் என்கிற அமைதியான, குளிர்ச்சியான உறுதிமொழியை படிப்பதற்கு மிகவும் பயங்கரமானதாக காணப்பட்டது.

### தெய்வீக திட்டத்தை பற்றிய அறிவு வேதவாக்கியங்களை சரியானபடி புரிந்துகொள்ளச் செய்கிறது.

நமது குருடான மனக்கண்கள் திறக்கப்பட்டதற்கும் ஆயிரம் வருட யுக விடியலுக்காகவும், தெய்வீக திட்டத்தை வெளிப்படுத்தியதற்காகவும், நமது எண்ணங்களை சரிப்படுத்தியதற்கும் வேத வாக்கியங்களை சரியானபடி பகுத்து பயன்படுத்தச் செய்வதற்கும் மகா பெரிய குழப்பத்திலிருந்து நம்மை வெளியே கொண்டு வந்ததற்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம். இஸ்ரயேலர்கள் சென்றது நரகத்திற்கு அல்ல, கல்லறைக்கு, ஹேடசுக்கு ஆகும் என்பதை நாம் கண்டோம். அந்த நரகத்தில் உணர்வே இருக்காது. (எபிரேயு– ஷியோல்; கிரேக்கம் – ஹேடஸ் – எசேக்கியல் 37:12; சங்கீதம் 6:5) குருடாக்கப்பட்டவர்கள், இடறினவர்கள் இன்னும் அங்கே இருக்கிறார்கள். அவர்களது பேரப்பிள்ளைகளும் நூற்றாண்டுகளுக்கு பின்னர், அவர்களது குருட்டுத்தனம் நீக்கப்பட்டு, அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவர்கள் அனைவரும் தனித்தனியாக இந்த சலுகையை அனுபவிப்பார்கள்.

அவிசுவாசிகள், மனக்கண் குருடாக்கபட்டவர்கள், இடறி விழுந்த அனைவர் மேலும் தேவன் இரக்கங்கொண்டு, அந்த குருட்டுத்தனத்திலிருந்து மீட்டெடுத்து, தெளிவான முழுமையான அறிவைக் கொடுத்து, கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதலின் மூலம் ஜீவனை பெறுகிறதை அல்லது கீழ்ப்படியாததின் மூலம் இரண்டாம் மரணத்திற்கு போவது என்கிற முழு பொறுப்பையும் ஒவ்வொருவருக்கும் கொடுப்பார். (வசனம் 27-32; யோவான் 5:28; எசேக்கியல் 37:12,13; யோவன் 1:9)

இப்படியாக காரியத்தை தெளிவாக பார்ப்பது ஒரு பெரிய உதவியாக இருந்தது. எனினும் தேசத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட சிலரைத் தவிர மற்ற அனைவரையும் குருட்டுத்தனத்திலும், பொறியிலும், இடறுதலிலும் வைத்தற்கான காரணத்திற்கான விளக்கத்திற்காக நமது இருதயம் தேவனிடம் இன்னும் கூக்குரல் இடுகிறது. அவர்களுக்கு தேவன் கிருபையான வாக்குத்தத்தங்களை செய்து முன்னரே அநேக காரியங்களை அவர்களுக்கு செய்திருக்கிறார். பத்தொன்பது நூற்றாண்டுகளாக சகல ஜாதிகளிலும் இஸ்ரயேலர் மட்டுமே, அவரை ஆளுனராக அங்கீகரித்து, அவரது உடன்படிக்கையின் உறவுக்கும், அவரது பிரமாணத்திற்கும் கீழ் இருந்தார்கள்.

### இஸ்ரயேலின் வாக்குத்தத்தம் பூமிக்குரியது – பரத்துக்குரியது அல்ல

இஸ்ரயேலை தேவன் அவரது இரட்சிப்பின் திட்டத்தில் ஒரு உயர்ந்த மற்றும் மேன்மையான பங்குக்கு அழைத்த போது, பிரதானமான சலுகை மற்றும் கனத்திற்கு அழைக்கவில்லை என்பதே தேவனுடைய வார்த்தையின் பதிலாக இருக்கிறது. அவர் அவர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் பூமிக்குரியது, பரத்துகுரியது அல்ல. யாக்கோபின் குமாரர்கள்அனைவரும் அழைக்கப்பட்டாலும், அது நிபந்தனையுடனான அழைப்பாக இருந்தது. ஆனால் ஒரு ஜாதியாக அவர்கள் அதற்கு இணக்கமாக நடக்கவேயில்லை. சிலர் மட்டுமே அவரது கட்டளைகளை கைக்கொண்டார்கள். (சரியான நோக்கத்துடன் அதைக் கைக்கொண்டதாக கருதப்பட்டார்கள்) யாக்கோபின் பிள்ளைகளில் சிலர் வெளிப்படையாக தேவனுடைய பிள்ளைகளாக இருந்தாலும், உண்மையிலேயே முழுவதுமாக பிசாசினுடைய பிள்ளைகளாக இருந்தார்கள். (யோவான் 8:44) ஏனெனில் இஸ்ரயேல் வம்சத்தார் அனைவரும் இஸ்ரயேலர் அல்ல. (ரோமர் 9:6)

நமது இரட்சகரின் சுயபலியினால் பாவத்திற்கான மகா நிவாரணம் செய்யப்படுவதற்கான தேவனுடைய ஏற்ற வேளை வந்த போது, அவரது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை தேர்ந்தெடுக்க ஆரம்பிக்கும் அவரது ஏற்ற வேளையாகவும் இருந்தது. அவர்களுக்கு அவரது மாபெரும் திட்டத்தில், அவருக்கு அடுத்தபடியான இடத்தை, மிகவும் உன்னதமான இடத்தை வைத்திருப்பதை வாக்குத்தத்தமாக கொடுத்தார்.

### ஆவிக்குரிய இஸ்ரயேலர் முழுமையடையும் வரை மாம்சீக இஸ்ரயேலர் ஒதுக்கி வைக்கப்பட்டனர்

கிறிஸ்துவே ஆவிக்குரிய அல்லது பரத்துக்குரிய இஸ்ரயேலருக்கு பிரதானமானவராகவும் தலையானவராகவும் ஆனார். மாம்சீக இஸ்ரயேலர் அதன் விலையேறப்பெற்ற பூவிக்குரிய வாக்குத்தத்தங்கள் இனி மேல் நிழலாகவோ அடையாளமாகவோ இருக்காது. கிறிஸ்துவின் பலி நிறைவேற்றப்பட்டவுடனேயே, அவரது "மணவாட்டியாக" அல்லது "சரீரமாக" அல்லது "சகோதரர்களாக" அல்லது "உடன்சுதந்தரராக" தேர்ந்தெடுக்கப்படும் வேலை ஆரம்பமாக ஏற்ற வேலையாக இருந்தது.

இருவித இஸ்ரயேலர்கள் ஒன்றன் பக்கம் ஒன்றாக தொடர வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருக்கவில்லை. ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ஆரம்பமானவுடன் மாம்சீக இஸ்ரயேலர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர், என்றென்றைக்குமாக அல்ல; ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தேர்ந்தெடுக்கும் வரை ஆகும். ஆனால் மாம்சீக இஸ்ரயேலர் வீட்டார் கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் சமயத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தாலும் (மத்தேயு 23:38) ஆவிக்குரிய இஸ்ரயேலின் அங்கமாகும் முதல் சந்தர்ப்பம் அந்த ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது.

மாம்சீக இஸ்ரயேலில் "மீந்திருந்த" கொஞ்ச பேர் மட்டுமே, ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான விசுவாசம் மற்றும் பலிக்கான சோதனைகளில் நிற்க முடிந்தது என்பதில் ஆச்சரியமில்லை. "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்" என்று சொல்லப்பட்ட "மாயக்காரர்கள்" புதிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களில் ஐக்கியத்திற்குள் சத்தியம் மற்றும் ஆவியினால் இழுக்கப்படும் நிலையில் நிச்சயமாக இல்லை. தேவனுடைய வாக்குத்தத்தத்தில் நம்பிக்கையாயிருந்த உத்தம இஸ்ரயேலர்கள் கூட குரோதம் இல்லாமல் சுத்தமான இருதயமும் சுவிசேஷ யுக அழைப்பின் கீழ் விசுவாசமும் கீழ்ப்படிதலும் உடையவர்களாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகையால் தெய்வீக ஏற்பாட்டின் மூலம், அந்த ஜனங்களில் சிறந்தவர்களுக்கு மட்டுமே சிலுவையின் சுவிசேஷம் போதிக்கப்பட்டு, "மற்றவர்கள் கடினப்பட்டிருந்தார்கள்;" அவர்கள் கடினப்பட்டிருந்ததை தேவன் ஏற்றுக்கொள்கிறவராக இருந்தார்.

### பூமிக்குரிய மற்றும் பரலோகத்திற்குரிய இஸ்ரயேலர்களிடையேயான பெரிய பிளவு அழிக்கப்பட வேண்டும்

அவர்களது தவறான அபிப்பிராயத்தால் அவர்களுக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் இடையே "ஒரு பெரும் பிளவு" ஏற்பட தேவன் அனுமதிக்கிறார்.தேவன் அவர்களை

உலகத்திற்கு முன்பாக ஒரு காட்சியாக வைப்பார். கொஞ்ச காலம் அவர்கள் புறக்கணிக்கப்பட்டாலும், அவர்கள் ஒரு இறந்து போன ஜாதியாக, உலகெங்கிலும் தேவனுடைய வார்த்தைக்கு சாட்சியாக இருக்க வேண்டும். முடிவாக அவரது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை தெரிந்துகொண்டு மெருகேற்றி, மகிமைப்படுத்தும் போது, “பெரும்பிளவை” நீக்கிப்போடுவார். அவர்களது மனக்கடினம் நீக்கப்பட்டு, அப்பொழுது வருகிற அனைவரும் கிருபைக்கு திரும்ப வருவார்கள். மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயேல் மூலமாக அவர்கள் மீதும் இரக்கம் காண்பிக்கப்படும். (வசனம் 31,32)

“ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம் அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளாயிருக்கிறது!” யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாடு எவ்வளவு மேன்மையான முறையாக. சரியானதாக மற்றும் நீதியானதாக இருக்கிறது. (ரோமர் 11:33)

**அவர்களுடைய பந்தி எப்படி ஒரு சுருக்கும், கண்ணியும் இடறுதற்கான கல்லுமாக ஆயிற்று**

ஆனால் இப்பொழுது இன்னொரு கருத்து கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. எந்த வகையில் அவர்களது பந்தி, சுருக்கும் கண்ணியும் இடறுதற்கான கல்லுமாக இருக்கிறது?

அவர்களது “பந்தி” என்பது அவர்களது உணவை குறிப்பிடுகிறது. அவர்கள் பந்தி அல்லது உணவு மாம்சீக இஸ்ரயேலருக்கு முன்பாக பரவி கிடக்கிறது என்பது, அவர்கள் தேவனுடைய மாம்சீக பிள்ளைகளாக. தெரிந்துகொள்ளப்பட்ட பிள்ளைகளாக தேவனுடைய விசேஷித்த கிருபைகளும் வாக்குத்தத்தங்களும் உள்ளடக்கியிருக்கிறது. (மத்தேயு 15:26,27) இப்படியாக அவர்களுக்காக தேவனுடைய நன்மையும் கிருபைகளும் அவர்களது அர்ப்பணிக்கப்படாத இருதயங்களை தப்பெண்ணம் கொள்ளவும் அவர்களை கண்ணியில் விழவும் இடறி விழவும் செய்தது. அவர்கள் தேவனுடைய கிருபையை நினைத்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே “ஆபிரகாம் எங்களுக்கு தகப்பன்” என்று சொல்லிக் கொண்டார்கள்.(மத்தேயு 3:9) தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்றும் தாங்கள் ஆபிரகாமின் சந்ததியின் பிள்ளைகளாக, ராஜ்யமானது உலகத்தை ஆசீர்வதித்து, சீக்கிரத்திலோ பின்னரோ அது அவர்களுடையதாக ஆகும் என்று முடிவு செய்தார்கள். அவர்கள் தங்களையே நம்பி மற்றவர்களை வெறுத்தார்கள். அவர்கள் முரட்டாட்டம் உள்ளவர்களாகவும் கர்வம் மற்றும் சுய நம்பிக்கை உள்ளவர்களாகவும் ஆனார்கள். கர்த்தரோ, தமது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்காக தாழ்மையான ஆவியுடையவர்களையே தேடினார்.

**கிறிஸ்துவின் பாடுகளை முன்னறிவித்த குறிப்பிட்ட வேத வாக்கியங்களை அசட்டை பண்ண கர்வமானது வழி நடத்தியது**

அவர்களது கர்வமானது இஸ்ரயேலர் உயர்த்தப்படுதலோடு இணைந்த கனம், மகிமை மற்றும் வல்லமையை மட்டுமே பார்க்க வழி நடத்தியது. முதலாவது மேசியா நிராகரிக்கப்படுவார். மற்றும் “அடிக்கப்படும்படிக்கு கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும்” இருப்பார். “அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்;” நமது பாவங்களுக்காக அடிக்கப்பட்டு, “நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது” என்று கூறுகிற வாக்கியங்களை புறக்கணிக்கவும் வழிநடத்தியது.

அவர்கள் முதலாவது எல்லா தேசங்களுக்குள்ளும் சிதறடிக்கப்படுவார்கள். அங்கே தேவன் அவர்களுக்கு தயவு காண்பிக்கமாட்டார் என்றும் அவர்களது பிற்கால ஆசீர்வாதம் அவர் எல்லா தேசங்களிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்படுதலுடன் இணைந்திருக்கும் என்றும் தேவனுடைய தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்ட அறிக்கைகளையும் அதே காரணத்தினால் கவனிக்கத் தவறினார்கள். (எரேமியா 16:13-17; உபாகமம் 4:26-28; 28:36,37, 63-65) கர்த்தர் அவர்களை விடுவிக்கும் போது, “அவர்கள் தாங்கள் குத்தின அவரை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காக புலம்புகிறது போல புலம்புவார்கள்.” (சகரியா 12:10)

இப்படியாக அவர்களது “பந்தி” அவர்களுக்கு “கண்ணியாயிற்று.” இது அவர்களை இறுக்கமாக பற்றிக் கொண்டது. இந்த வாக்குத்தத்தங்கள் மேல் கட்டப்பட்டிருந்த அவர்களது இருதயத்தின் கர்வம் இன்னும் அவர்களை கடினப்படுத்தியது. அவர்களுடைய இடறுதலுக்கு தேவனுடைய தவறான செய்கை காரணமில்லை என்பதை ஜாக்கிரதையுடன் நாம் கவனிக்க வேண்டும் இல்லை; “அவருடைய வழிகள் செம்மையானவை” நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. “அவர் கலகத்திற்கு தேவன் அல்ல.” அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் அளித்த “பந்தி” நல்லது. முழு கஷ்டம் இஸ்ரயேலரின் அர்ப்பணம் முழுமையடையாத -தேயாகும். எனவே அனைவரின் கண்களும் திறக்கப்பட்டு, சத்தியத்தின் சரியான அறிவுக்கு வரக் கூடிய மேசியாவின் யுகத்துக்கு முன்னரே சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும் என்று கர்த்தர் நோக்கங்கொண்டிருந்த வகுப்பாராக இஸ்ரயேலரில் பெரும்பாலனோர் இல்லை.

**நாம் கற்றுக்கொள்ளுவதற்காக விசேஷமாக இவைகள் எழுதப்பட்டிருக்கிறது**

ஆனால் நாம் இப்பொழுது இந்த பாடத்தின் முக்கியமான அம்சத்திற்கு வருகிறோம். இவைகளெல்லாம் முடிவு காலத்தில் உள்ள நாம் அறிந்து கொள்ளும்படியாக எழுதப்பட்டிருக்கின்றன. (1கொரிந்தியர் 10:11) மாம்சீக இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு நிழலாக அல்லது முன் அடையாளமாக இருப்பதால், அவர்களது யுகத்தின் சுருக்கும் கண்ணியும், இடறுதலும் இந்த யுகத்தில் உண்மையுள்ளவர்களைத் தவிர “மீந்திருக்கிற” மற்ற அனைவருக்கும் ஒரு சலித்தலை அடையாளமாக காண்பித்தது.

அப்போதிருந்ததைப் போல இப்போது அநேக பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், இஸ்ரயேலர்களாக இராமல், “மாயக்காரர்களாகவும்” அவர்களுடைய பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்களாகவும் இருக்கிறார்கள். அங்கே இருந்ததைப் போல இங்கேயும் உண்மையான இஸ்ரயேலராக இருக்கும் அனைவருக்கும் முன்பாக “மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்” இருக்கின்றன. தேவனுடைய “பந்தி” பரவியிருக்கிறது. இவர்கள் அனைவரும் தேவனுக்கு பிரியமாயிருக்கவும் ராஜ்யத்திற்கு தகுதிப்படுத்தவும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஜீரணித்து குணலட்சணத்தை உயர்த்தவில்லை. ஆகையால் அவர்களது பந்திக்கு உணவு கொடுக்கப்பட்ட போதும் அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய கிருபையை விருதாவாக பெற்றார்கள். இவர்களுக்கு நிழலைப் போல, முன்னடையாளத்தைப் போல இவர்களை சந்தோஷப்படுத்திய சத்திய “பந்தி” சுருக்கும், கண்ணியும் தடுக்கலின் கல்லுமாக ஆவது நிச்சயம். விசேஷமாக இப்படிப்பட்டவர்களுக்காக, இப்பொழுது நமக்கு அபரிமிதமாக வழங்கப்படும் “உணவை” எப்படி பயன்படுத்த வேண்டும் என்று கூற அவர்களை பாதுகாப்பிற்குள் வைக்கவே நாம் இப்பொழுது எழுதுகிறோம். (லூக்கா 12:37)

நீதியின் மேல் (சத்தியம்) கொஞ்சமாவது பசி தாகம் உள்ளவர்கள் மட்டுமே இந்த பந்திக்கு அழைக்கப்படுகிறார்கள். இது தேவனுடைய பிள்ளைகளின் பந்தி, உண்மையான தேவனுடைய பிள்ளைகளைத் தவிர மற்றவர்கள், மேஜையிலிருந்து விழும் துணுக்குகளை மட்டுமே உண்ணமுடியும்.

**ஆசாரியர்களைத் தவிர வேறு யாராவது சமூகத்து அப்பங்களை புசிப்பது தவறானது**

அது கர்த்தருடைய அர்ப்பணம் செய்த விசுவாசிகளின் பந்தி, “அதற்குரியவைகளை புசிக்கிறதற்கு மற்றவர்களுக்கு அதிகாரமில்லை.” (எபிரேயர் 13:10) உண்மையாகவே

அர்ப்பணம் செய்தவர்கள் மெய்யான அல்லது ராஜரீக ஆசாரியகர்களாக இருக்கிறார். இவர்களது "பந்தி" ஆசரிப்பு கூடாரம் மற்றும் அதன் மேஜையில் இருக்கும் சமூகத்து அப்பங்களுக்கும் ஒப்பிட்டு சொல்லப்பட்டது. அதை ஆசாரியர்களைத் தவிர யாருக்கும் புசிக்க அதிகாரமில்லை. ஆகையால் நீங்கள் "கர்த்தர் கிருபையுள்ளவர் என்பதை ருசிபார்த்திருந்தால்," "தேவனுடைய நல்ல வார்த்தையை ருசிபார்த்திருந்தால்," "உலகம் அறிந்திராத உணவை நீங்கள் பெற்றிருந்தால்," "தற்கால சத்தியத்தை" "ஏற்ற வேளையில் போஜனத்தை ருசிபார்த்திருந்தால்" நீங்கள் அர்ப்பணம் செய்தவர்களில் ஒருவர் என்பதையும் ராஜரீக ஆசாரியர்களில் ஒருவர் என்பதையும் குறிக்கிறது. இல்லையென்றால் நீங்கள் அவர்களிடம் தொடர்பு கொண்டு அவர்களது மேஜையிலிருந்து விழுகிற துணுக்குகளை பெறுகிறீர்கள்.

எல்லா சத்தியத்தையும் கொடுப்பது, விசேஷமாக "தற்கால சத்தியத்தை" கொடுப்பது ஒரு நோக்கத்தைக் குறிக்கிறது. அந்த நோக்கம் பரிசுத்தப்படுத்துதல் அல்லது தேவனுக்காகவும் அவரது ஊழியத்துக்காகவும் பிரித்தல் ஆகும். சத்தியத்தின் துணுக்குகள், அர்ப்பணம் அல்லது பரிசுத்தப்படுத்துதலுக்கு வழிநடத்துதலுக்கு ஒரு ஆசையை எழுப்புவதற்காக ஆகும். நிறைவான பந்தி (உணவு) என்பது தங்களையும் தங்களது சித்தம் மற்றும் தங்களுக்காக அனைத்தையும் கர்த்தருக்கு முற்றிலும் அர்ப்பணம் செய்யக்கூடிய நடவடிக்கையை எடுத்தவர்களுக்காக ஆகும். மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் நிறைவாக அவர்களுக்கு வழங்கப்படுவது அவர்கள் பலப்படவும் மரணபரியந்தம் அவர்கள் செய்திருக்கிற முழுமையான அர்ப்பணத்தை முழுமையாக, படிப்படியாக நிறைவேற்ற திராணியுள்ளவர்களாக்கவும் ஆகும்.

நமது அர்ப்பணத்தின் நோக்கமும் அதைத் தொடர்ந்து சத்தியத்தின் வல்லமை மற்றும் வழிநடத்துதலின் கீழ் நெறிப்படுத்துதலும் குணலட்சணத்தை உருவாக்கவும் "பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தவும்" ஆகும். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினாலே, "பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" என்று அப்போஸ்தலர் கூறி, நமது விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களின் நோக்கமே ஆவிக்குரிய உணவு என்று காண்பிக்கிறார். (2 கொரிந்தியர் 7:1) நாம் பெற்று பல்வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்துகிற அறிவானது நல்ல பலனை கொடுப்பதற்கு பதிலாக தவறானதை தன்னை மிகைப்படுத்தி அல்லது பெருமையை அல்லது பிடிவாதத்தன்மையை ஏற்படுத்தலாம் என்று அப்போஸ்தலர் உறுதியாக கூறுகிறார்.

## சத்தியமானது நமது இருதயத்தில் என்ன விளைவை ஏற்படுத்துகிறது?

நாம் கணிசமான அளவு சத்தியத்தின் அறிவை, தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்தைப் பற்றிய அறிவை பெற்றிருக்கவில்லையா என்ற கேள்வியை நம்மில் ஒவ்வொருவரும் கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அது என்னை மிகைப்படுத்தி எண்ணுகிற தவறான விளைவையும் நான் வேறு யாரோ என்று உணரும்படியும் செய்கிறதா? அது சுயதிருப்தியின் உணர்வை ஏற்படுத்தியதா? தனது சொந்த பலவீனத்தையும் தோல்விகளையும் புறக்கணித்து, தேவனுடைய இரக்கத்தில் வெறுமனே சார்ந்திருந்து, அந்த இரக்கத்தை மிகைப்படுத்த நாடவும் "தேவன் நாள்தோறும் பாவியின் மேல் சினங்கொள்ளுகிறார்;" எல்லாவித அநியாயத்திற்கும் விரோதமாய் தேவகோபம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது," ஏனெனில் "அநீதியெல்லாம் பாவந்தான்." பாவத்தை (தெரிந்தே) செய்கிறவர்கள் "பிசாசின் பிள்ளைகள், பொல்லாதவர்களை தேவன் அழிப்பார்" என்று தெளிவாக காண்பிக்கிற வேதவாக்கியங்களை அசட்டை பண்ண செய்கிறதா? அல்லது அது தன்னை மிகவும் தாழ்மையாக உணரவும் எல்லா நன்மைகளையும் வழங்குகிறவரை சார்ந்திருக்கவும் செய்கிறதா? மேலும் நீதி, பக்தி, பரிசுத்தம் மற்றும் சத்தியத்திற்காகவும் "விலையேறப்பெற்ற இரத்தத்திலான" எனது மேலான முயற்சியை பயன்படுத்தும் போது தெய்வீக அங்கீகாரத்தையும் இளைப்பாறுதலையும் பாதுகாப்பையும் உணருகிறேனா?

கடைசியாக சொல்லப்பட்டது மட்டுமே சத்தியத்தின் சரியான மற்றும் முறையான பயன்பாடாக இருக்கிறது. தேவனுடைய குணலட்சணத்தின் உண்மையான தோற்றம் அவருடைய திட்டம் மற்றும் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களில் காணப்பட்டு, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு வெளியே இருந்தால், நமது காதுகளையும் இருதயத்தையும் அடைந்து உண்மையுள்ளவைகள், ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள் மற்றும் அன்புள்ளவைகளுக்கு தகுந்த மரியாதை கொடுக்கவும், அதிகமதிமாக தேவனைப் போன்று மறுரூபமடைய விருப்பங்கொள்வதிலும், மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான அசுசி நீங்க சுத்திகரித்து கொள்ளுவதிலும் தோல்வியடைந்தால். சத்தியத்தின் பலன்கள் நமது மாம்சத்திலும் ஆவியிலும் (சிந்தை) உண்டாகவில்லையென்றால் நாம் தேவனுடைய கிருபையை விருதாவாக பெற்றவர்களாகிறோம். ஏனெனில் அதுவேறு எந்த நோக்கத்திற்ககாவும் கொடுக்கப்படவில்லை. நாம் தேவனுடைய கிருபையையும் சத்தியத்தையும் விருதாவாக பெற்றோமானால். அது கொஞ்ச காலத்தில் நம்மை விட்டு நழுவி, தவறான கருத்துகள் வந்துவிடும்.

ஆகையால் தேவனுடைய நிழலான ஜனங்கள் மூலமாக நமக்கு கொடுக்கபட்டிருக்கிற விளக்கங்களில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருப்போமாக, ஆண்டவரை நமக்கு பெருமளவில் அறிந்த நமது பந்தி, நமக்கு ஒரு சுருக்கும் கண்ணியும் இடறுதற்கேதுவான கல்லுமாக ஆகாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருப்போமாக. அதாவது நாம் முன்னரே பெற்ற ஆசீர்வாதங்களை நாம் சரியானபடி பயன்படுத்த தவறுவோமானால் உலகத்தின் "புறம்பான இருளில்" தள்ளப்படுவோம்.

"அவருடைய இளைப்பாறுதலின் (நமது இருதயம் நமது நடத்தையில் முழு அர்ப்பணத்தின் மூலம் நமது குணலட்சணத்தை அபிவிருத்தி செய்து மகிமைமேல் மகிமை அடைந்த தேவனுடைய குமாரனுடைய சாயலுக்குள் மறுரூபமடைதல்) பிரவேசிப்பதற்கு ஏதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கடவோம். "(எபிரேயர் 4:1)

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்

வெளியிடுபவர் :

சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com

**FOR PRIVATE CIRCULATION ONLY**